வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 18.09.2024 புதன்கிழமை | இதழ் : 262 | பக்கங்கள் : 12

MARUTHI MONEY EXCHANGE

மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433 076 284 4443

MoneyGram

Ria MONEY TRANSFER

WESTERN UNION

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



சகலருக்கும் வெற்றி ஐக்கியமான நாடு

நாம் எமது குழந்தைகளின் எதிர்காலத்திற்காகவும் தேசத்தின் எதிர்காலத்திற்காகவும் சஜித் பிரேமதாச உடன் தோளுக்கு தோளாய் நிற்கின்றோம்"

## “தேசத்தின் பொதுமக்களுக்கு,

தேசத்தின் விரிவுரையாளர்களும் கற்றல் வழிகாட்டிகளுமாகிய நாம், தேசத்தின் எதிர்கால இளைஞர்களை பாதுகாத்தல் நிமித்தம் ஒன்றிணைந்து கைகோர்க்க உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். எமது பல்கலைக்கழகங்கள் அரசியலுக்கான நாடகமேடையாக அமைந்துவிடக்கூடாது. எமது கொள்கைகளையும் கற்றல் நெறிகளையும் அனர்த்தங்களை நோக்கி இட்டுசெல்பவர்களின் கைகளுக்கு அதிகாரத்தினை பெற்றுக்கொடுக்க இடமளியாதீர்கள். ஒழுக்க-விழுமியம், கற்றல் மற்றும் வளர்ச்சியின் பக்கம் மார்நிமிர்த்தி நிற்கும் தலைவனுக்கு உங்கள் வாக்குகளை பெற்றுக்கொடுங்கள்.”

எமரிட்டஸ் பேராசிரியர் G.U. பீரிஸ், கொழும்புப் பல்கலைக்கழகம்.

எமரிட்டஸ் பேராசிரியர் S.B. ஹெட்டியாராச்சி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

எமரிட்டஸ் பேராசிரியர் P. அமரசிங்க, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் உப்புல் B. திசாநாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் கெஸ்மை D. குணவர்தன, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் அஜுர உடுமல்கொ, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் நயனி மெலேகொட, கொழும்புப் பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் நதாலகமுகே தம்மதின்ன, களனி பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் K.K.U.U. அருண குமார, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் W.M.D. தேசப்பிரிய குணசேன, களனி பல்கலைக்கழகம்.

ஓய்வுபெற்ற மூத்த பேராசிரியர் தயா அமரசேகர, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் அமலா வியகுகே, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் H.M. நவரத்ன பண்டார, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் J.M. ஆனந்த ஜயவிக்ரம, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் உப்புல் அபேரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S.W.R. தமயந்தி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A.G. அமரசிங்க, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் T.M.L. தம்மிகா கமாஷினி, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் R. ஜெக்கரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.M. பாஸில், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S. சுப்ராஸ் நவாஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.H. தவ்பீக், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A. ஜப்பர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.A.S.F. சாதியா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.C.A. நஸார், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A.L.A. றெவைப், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.I.M. ஹிலால், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் W.K.D. கீர்த்திரத்ன, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் C.R. விதானாச்சி, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் சுமனசிரி வால்லகே, உறுகுணை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் அலெக்சாண்டர் கப்புகொட்டுவ, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A.A. அசீஸ், கொழும்புப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S.C.P. குமார, கொழும்புப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் கீர்த்தானி புலங்குலம, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் தம்மிக திசாநாயக்க, கொழும்புப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் மோஹித் ஆரியரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் சஞ்சீவி மந்திரிரத்ன, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் W.M.M.P.S. பண்டார, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் R.M.M. சந்திரரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ரோஹித்த தசநாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.S.M. சலீம், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S. விஜயசந்திரன், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் D.M.L. திசாநாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.V. சந்திரசிறி, உறுகுணை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S. ஸப்பீர் நவாஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A. ஜப்பர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் P.D. பிரேமசிறி, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S. பிரிஷாந்தன், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் அத்தம்பலா சர்ஜுன், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.K.L. இங்கரனி, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ப்ரேமா பொடிமெனிக்கே, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் வீரசேனா, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் R.P.I.R. பிரசன்னா, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் டிக்கிரி ஹேரத், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் பிரதீப் வீரசிங்க, கொழும்புப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் காமினி ரஞ்சனசிறி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S.A. கலன்சூரிய, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் விஷாகா சூரியபண்டார, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.Z.M. நபீல், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் துஷேஷ் குணதிலக்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ஷாந்தா கம்லத், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் தமயந்தி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A.M.N.W. மெண்டிஸ், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் W.M. கருணாதாச, கொழும்புப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் சந்திரசிறி ஹேரத், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் K.A.S. தம்மிக்கா, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் தம்மிக்க திசாநாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி சம்பத் ராஜபக்ஷ, களனி பல்கலைக்கழகம்.

கலாநிதி S. பாஸ்கரன், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி சமிந்த G. கமகே, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி M.V.C. சந்திரசிறி, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி திலக் விஜேசுந்தர, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி ஒஷான் வெத்தகே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

கலாநிதி M.I.M. ரியாத், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி ரஷீஸா சியாத், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி M.B.M. அம்ஜத், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி A. இல்முதீன், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி R.A.N.M. ஜயசிங்க, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

கலாநிதி சாஞ்சித் குணசேகர, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி S.R. தீஸீர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி சனத் முதலிகே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

கலாநிதி ஸ்ரீயானி குணரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி R. ரமேஷ், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி C.C. ஜயசுந்தர (நூலகர்), களனி பல்கலைக்கழகம்.

கலாநிதி மாஹிம் மெண்டிஸ், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

கலாநிதி சமன் இலங்கரத்ன, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

கலாநிதி ஷான் பண்டார, SDTI பல்கலைக்கழகம்.

கலாநிதி S.D. காமினி ஜயசூரிய, இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்.

கலாநிதி விந்தியா வீரவர்தன, களனி பல்கலைக்கழகம்.

கலாநிதி விமலதம்ம தேரர், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

கலாநிதி தம்மசிறி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

கலாநிதி G.C.L. கமகே, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி அத்துலசிறி சமரக்கோன், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

கலாநிதி P. சரவண குமார், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி S.R. தெளஸீர், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி S. சுதர்ஷன், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி M.M. பிரோஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி ரணில் அபேசிங்க, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் தம்பர அமில தேரர், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. R.M.G. கருணாரத்ன, களனி பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. D.D.R. டி சில்வா, களனி பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. பாத்திமா ரவீதா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. M.I. பாத்திமா நிஹ்லா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. H.M. நிஜாம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. A.L.M.A. வஹீம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.M.M. சிராஜ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. H.G.K.M. பண்டார, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. T.G.D. உதயகாந்தி, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. W.A.N.D. விஜேசிங்க, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.D. பண்டார, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. திஷாந்த ஹரிஸ்சந்திர, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. E.H.M. ஹீன்பண்டா, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. P. காயத்திரி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. N.M.P. நெத்தாசிங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. D.L. ரணகல, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. H.A.S.U. கீதாஞ்சலி, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.M. இசற்ஜால், பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.L.M. ஹனீபா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.A.M. யசீர், பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் சனத் குணவர்தன,

மூத்த விரிவுரையாளர் திரு. C. குமார, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. N.M.A. ஜயசிங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. S.C. குமார, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. S. சிவகாந்தன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. T. திலீபன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. S. ஜீவசுதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. V. ஸ்ரீதரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.A.M. யசீர், பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. P. கலைவதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.L.M. ஹனீபா, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. A. யோகராஜா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M. பிரகாசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. V. கமலசிறி, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M. ஜும்னா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M.B. சுப்னா சக்கி, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. S. சந்திரகுமார், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M. பர்வீஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.J.M. ஹஸ்மி, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.M.A. சஜா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M. அப்துல் ரசக், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.M. ஷஹான், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. N. சுபராஜ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. T.L. சக்கீர் ஹுசைன், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.R.M. அன்சார், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M.M. மனோஜ் ஜயபால், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. சரத் பத்திராஜா, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. அரவிந்த பண்டார, கொழும்புப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. தில்ஹாரா லக்ஷானி, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. J.M.S.B. சேனவிரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. A.M.C.H. அத்தனாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. M.A. நிஸ்னா, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. N. சிவக்குமார், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. G. ஜமதீஸ்வரன், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. H.S. விஜேராகெதர, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.M.M. நிக்காஸ், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. S.M. தமீம், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. M.A.A. பாஜு, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. J. வலீத் அஹமத், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. S.S. ஹேவாவாசம், ரஜரட்டை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. M.B. பாத்திமா சஜீத்தா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. B.N.G. பெரேரா, உறுகுணை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. O.A.Y. சமத்யா, உறுகுணை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. H.D.W. கமலசிறி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. G.K. விதாபத்திரன, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. M.A.B.S. மெதகெதர, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. V.M. நில்வான், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. A.M. ஷஹன், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. R.M.W. குலதுங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. J.M.R.D. லக்மால், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. ஹர்ஷானி செவ்வந்தி ஹந்தெல்ல, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. R.K. திசாநாயக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. ரசிக்கா ஜயசிங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. H.H.M.P. மதுசங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் D. உபாலி தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. ரஞ்சனா கீதாலங்கார, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. A.G. மதுஷானி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் U. குணாநந்தன தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் K. பண்ணலோக்க தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் E. தீப்பா நந்த தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் M. நந்தலோக்க தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் E. மஹிந்த தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. S.U.B. ஹேவாகே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. K.K.T. உதயங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. D.L. ரணகல, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. S. [illegible], பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M. ஹரிச்சந்திர, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் பிரசன்ன பெரேரா, பேராதனைப் பல்கலைக்கழகம்.

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
**Sajith Premadasa**

## உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கு பின் வன்முறை குறித்து பொதுமக்கள் பதற்றமடையக்கூடாது

## பவ்ரல் அமைப்பு வேண்டுகோள்

கொழும்பு, செப். 18

**ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னரான வன்முறைகள் குறித்த பதற்றமடைவதை பொதுமக்கள் தவிர்க்கவேண்டும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

பொதுமக்கள் அமைதியாகயிருக்க வேண்டும். தேர்தல் வாக்களிப்பிற்கு பின்னரான வன்முறைகள் குறித்த பதற்றத்துக்கு பலியாக கூடாது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் வன்முறைகள் இடம்பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து எங்களுக்கு எந்த தகவலும் கிடைக்கிவில்லை என தெரிவித்துள்ள அவர், வன்முறைகள் அமைதியின்மை குறித்த பல தகவல்கள் உறுதிப்படுத்தப்படாதவை, அதனை எச்சரிக்கையுடன் கையாளவேண்டும் என கூறினார்.

தேர்தல் காலத்தில் சமூக அமைதியை பேணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள அவர், ஐக்கியத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு மதத்தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், அரசியல் செயல்பாட்டாளர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

நாங்கள் அனைவரையும் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டு அமைதியான சூழலுக்கு பங்களிப்பு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அனைத்து பிரஜைகளும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்வது தேர்தல் வேட்பாளர்களின் கௌரவத்துக்கும் தேர்தல் நடைமுறைக்கும் அவசியமான விடயம் என ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (அ)

# நாகர்கோவில் நாகதம்பிரான் கப்பல் திருவிழா இன்று!

வடமராட்சி, செப். 18

வரலாற்று சிறப்புமிக்க வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் நாகதம்பிரான் சுவாமி ஆலயத்தின் வரலாற்றை வெளிப்படுத்தும் சிறப்பு திருவிழாவான கப்பல் திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அந்நியரான பிரித்தானியர்கள் நாகர் கோவில் கிராமத்துக்குள் புகுந்து அங்குள்ள மக்களை அடிமைகளாக்கும் நோக்கில் அவர்களை கப்பலில் ஏற்றி நாடு கடத்த முயன்றபோது மக்கள் அபயக் குரல் எழுப்ப அவர்களை ஏற்றிய கப்பலை நகர விடாது நாகேஸ்வரப் பெருமான் காப்பாற்றிய வரலாற்றை விளக்கும் வகையில் இந்தச் சிறப்புத் திருவிழா நடைபெறுவது வழக்கமாகும்.

இன்று புதன்கிழமை பகல் திருவிழா நிறைவுற்றதும் மாலை வசந்த மண்டப பூசை நடைபெறும். தொடர்நது இரவு முழுவதும் மேளக் கச்சேரி நடக்கும், பின்னர் நள்ளிரவுக்கு பின்னர் மீண்டும் வசந்தமண்டப பூசை நடைபெற்று சுவாமி வீதி உலா வருவார். அப்போது, வரலாற்றை எடுத்தியம்பும் வகையில் கலைஞர்கள் நாடகமாக நடிப்பர்.

நாகதம்பிரான் ஆலயத்தின் அலங்கார திருவிழா கடந்த 12ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமானது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பட்டுத் தீர்த்தத்துடன் இந்தத் திருவிழா நிறைவடையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

முல்லைத்தீவு, செப். 18

முல்லைத்தீவு மாவட்டத்தில், ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அ. உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க முல்லைத்தீவு மாவட்டத்தில் 86 ஆயிரத்து 889 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் முல்லைத்தீவு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் கூறினார்.

நேற்று மதியம், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# மக்கள் போலி டீல்களை முடிவுக்கு கொண்டு வருவர்

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித்

கொழும்பு, செப். 18

மக்கள் ஆணையால் ரணில் - அநுர டீல் முடிவுக்கு கொண்டுவரப்படும் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிச்சயம் மக்கள் ஆட்சியுகம் உருவாக்கப்படும். புனித பூமியிலும் மதுபான நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதே இந்த அரசாங்கத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது. 21 ஆம் திகதி தேர்தலை வெற்றி கொண்டு 22 ஆம் திகதி ஆட்சியமைக்கும் போது அனைத்து மதுபான நிலையங்களும் மூடப்படும். அரசியல் சலுகைகளுக்காக வழங்கப்பட்ட அனைத்து மதுபான அனுமதிப்பத்திரங்களும் இரத்து செய்யப்படும்.

சஜித்தை தோற்கடிக்கும் ரணில் - அநுர டீல் செயல்படுத்தப்படுகின்றது. அநுராதபுர மக்கள் அதற்கு இடமளிக்கப் போகின்றனரா என வினவ விரும்புகின்றேன். திருட்டுத்தனமாக டீல்களுக்கு இடமளிப்பதா? மோசடியான டீல்களுக்கு இடமளிப்பதா? எவர் எந்த டீலை மேற்கொண்டாலும் நாட்டு மக்கள் 22ஆம்திகதி திருட்டு டீல்கள் அனைத்தையும் முடிவுக்கு கொண்டு வருவர் - என்றார். (அ)

# வாகன இறக்குமதித் தடை நீக்கம் தேர்தலை இலக்காக கொண்டதல்ல

கொழும்பு, செப். 18

வாகன இறக்குமதிக்கான தடை நீக்கப்பட்ட விடயம் தேர்தலை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட விடயமல்ல என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாட்டு மக்களின் தேவை கருதி சில விடயங்களை அர்சாங்கம் செய்யும்போது ஏனைய கட்சிகள் அதனை தேர்தலுடன் தொடர்புபடுத்துகின்றன என்றும் அவர் சாடினார்.

# செல்லுபடியற்ற லைசன்ஸூடன் காரை செலுத்திய தேரர் கைது

கொழும்பு, செப். 18

செல்லுபடியற்ற சாரதி அனுமதிப்பத்திரத்துடன் காரை செலுத்திச் சென்ற குற்றச்சாட்டில் தேரர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் மீரிகமவில் உள்ள விகாரை ஒன்றில் வசிக்கும் 46 வயதான தேரர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கண்டியில் இருந்து குளியாப்பிட்டி - கந்தானேகெதர பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றை நோக்கி காரில் பயணித்துக் கொண்டிருக்கும்போது குருநாகல் போக்குவரத்து பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது, தேரர் காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்திருந்தமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, தேரர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வழிகாட்டலை மீறும் ஊடகங்களுக்கு தேர்தல் முடிவுகளை வழங்கமாட்டோம்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, செப். 18

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தேர்தல் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை மீறும் ஊடக நிறுவனங்களுக்கு உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை வழங்க மாட்டோம் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களை மீறும் அல்லது கடைப்பிடிக்காத ஊடக நிறுவனங்களுக்கு எதிராகத் தேர்தல் ஆணைக்குழுவால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்தாலும் அத்தகைய ஊடகங்களிடமிருந்து விலகி இருக்க முடியும்.

மின்னஞ்சல், வட்ஸ்அப் போன்ற ஊடகங்கள் ஊடாக அனைத்து ஊடக நிறுவனங்களுக்குத் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ முடிவுகள் பகிரப்பட்டு வருகின்றது.

ஊடக நிறுவனங்களுக்கான தேர்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்கள் கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது - என்றார். (அ)

தமிழ்ப் பொதுவேட்பாளர்
பா.அரியநேத்திரன்
அவர்களை ஆதரித்து
மாபெரும்
பொதுக்கூட்டம்


இடம் : நல்லூர் சங்கிலியன் ( கிட்டு) பூங்கா
திகதி : 18.09.2024 (புதன் கிழமை)
நேரம் : பிற்பகல் 3.30 மணி

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரன் அவர்களும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும், தமிழ் மக்கள் பொதுச்சபையின் பிரதிநிதிகளும், பல்கலைகழகச் சமூகத்தினரும் எழுச்சியுரை ஆற்றுவார்கள்.

கட்சிகளைக் கடந்து
தமிழினமாய்
அலை கடலெனத்
திரண்டு வருக!



மக்கள் புரட்சி வெல்லட்டும்!!



சமூக விஞ்ஞான ஆய்வு மையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 18.09.2024 புதன்கிழமை இதழ் : 262 பக்கங்கள் : 12

# பெரும்பான்மையான தமிழர் ரணிலையே ஆதரிக்கின்றனர்

## தமிழ் அரசின் சுமந்திரன் சொல்கிறார்!

கொழும்பு, செப்ரெம்பர் 18

தமிழர்களில் பெரும்பான்மையினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரிக்கின்றனர் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்குமாறு அவர் சார்ந்த தமிழ் அரசுக் கட்சி பகிரங்கமாக அறிவித்தது. தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு சஜித்துக்கு ஆதரவான நிலைப்பாட்டை அறிவித்ததில் இவரின் வகிபாகமே அதிகம் என்று கூறப்படுகின்றது. இந்தநிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், தான் தனிப்பட்ட முறையில் அநுரகுமார திஸநாயக்கவையே விரும்புகிறார் என்றும் வடக்கு, கிழக்கில் அவருக்கான ஆதரவு தமிழ் மக்களிடையே ஒப்பீட்டளவில் குறைவு என்றும் சுமந்திரன் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். 11

# வல்லிபுர தீர்த்தக் கடலில் நீராடிய ஒருவர் மரணம்!

## மற்றொருவர் மாயம்!

எஸ். தில்லைநாதன்

வடமராட்சி, செப். 18

வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்தத் திருவிழாவின்போது கடலில் நீராடியவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். மற்றொருவர் காணாமல் போயுள்ளார்.

வரலாற்று சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திருவிழாவில் சமுத்திர தீர்த்தம் நேற்று செவ்வாய்க்கிழமை வடமராட்சி - பருத்தித்துறை - கற்கோவளம் கடற்பரப்பில் நடைபெற்றது. இதன்போதே இந்த இரு சம்பவங்களும் இடம்பெற்றன.

இந்த சம்பவங்களில், வடமராட்சி கிழக்கு - அம்பன்குளத்தை சேர்ந்த கந்தசாமி வினோகரன் (வயது -54) என்பவர் உயிரிழந்தார். சாவகச்சேரி - நுணாவிலை சேர்ந்த தயாருபன் வைஷ்ணவன் (வயது -30) என்பவர் காணாமல் போயுள்ளார். 11

# உணவு, சுகாதாரம், கல்விக்கு வற் வரி முற்றாக நீக்கப்படும்

## ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார



கொழும்பு, செப். 18

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் எரிபொருள், மின்சாரம் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு இன்றி தொடர்ந்து வழங்கப்படும் என அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் கல்வி, உணவு மற்றும் சுகாதாரத்திற்கான வற் முற்றிலும் நீக்கப்படும் என்றும், மின் கட்டணம் 30 வீதம் வரை குறைக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். 11

# வாக்குச் சாவடியில் இடையூறு விளைவித்தால் துப்பாக்கிச்சூடு

## பொது பாதுகாப்பு அமைச்சர் உத்தரவு



கொழும்பு, செப். 18

வாக்களிப்பு நிலையங்களில் குழப்பம் ஏற்பட்டால் துப்பாக்கிச் சூடு நடத்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிடம் பேசியுள்ள அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, இவ்வாறான செயல்பாடுகளை கட்டுப்படுத்த பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்பு படையினருக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வாக்களிப்பு நாளிலும் அதன் பின்னரும் நாட்டின் பாதுகாப்பிற்காக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இந்நடவடிக்கைக்காக பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு மேலதிகமாக முப்படையினரும் களமிறக்கப்படவுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, வாக்குப் பெட்டிகளை கொண்டு செல்லும்போது விசேட பாதுகாப்பு வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப் படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ)

# இன்று நள்ளிரவுடன் பிரசாரம் நிறைவு

கொழும்பு, செப். 18

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் மற்றும் கட்சிகளின் பிரசாரப் பணிகளுக்கு இன்று புதன்கிழமை நள்ளிரவுடன் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இன்று நள்ளிரவுக்குப் பின்னர் தேர்தல் பிரசாரம், பேரணி, துண்டுப் பிரசுர விநியோகம் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவிக்கும் 11

# சார்ள்ஸ் நிர்மலநாதனை நேற்று சந்தித்தார் ரணில்



மன்னார், செப். 18

மன்னார் மாவட்டத்தில் நேற்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனை சந்தித்துள்ளார். 11

# முதலாம் பகுதியில் 3 வினாக்கள் நீக்கம்

## புலமைப்பரிசில் வினாத்தாள் கசிந்தமையால் நடவடிக்கை

கொழும்பு, செப். 18

நிறைவடைந்த தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளில் முதலாம் பாகத்திலிருந்து மூன்று வினாக்களை நீக்குவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் சில வினாக்கள் வட்ஸ்அப் செயலி மூலம் பகிரப்பட்டதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது. 11

# அரச மருத்துவர்கள் இன்று போராட்டம்!

கொழும்பு, செப். 18

சுகாதார அமைச்சின் செயற்பாட்டுக்கு எதிராக, நாடளாவிய ரீதியில், இன்று தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக பேச்சாளர் சமில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊவா மாகாண இணைப்பாளர் பாலித ராஜபக்ஷவுக்கு எதிராக, சுகாதார அமைச்சு 11

# ஈராண்டுகளுக்கு முன்பிருந்த இருண்ட யுகத்தை மறவாதீர்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

நாட்டை இருண்ட யுகத்துக்குள் கொண்டு செல்வதைத் தடுத்து, நாட்டின் முன்னேற்றத்துக்காக ஒன்றுபடுவோம் என ஐக்கிய தேசிய கட்சி, மொட்டுக் கட்சி, சிறீலங்கா சுதந்திர கட்சியினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அழைப்பு விடுத்தார். 11

# இறுதிக்கட்ட பரப்புரையில் ஜனாதிபதி வேட்பாளர்கள்!

கொழும்பு, செப். 18

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெற உள்ள நிலையில், இன்று புதன்கிழமை நள்ளிரவுடன் பிரசார நடவடிக்கைகள் நிறைவடையவுள்ளன. இந்நிலையில் பிரதான வேட்பாளர்கள் தமது இறுதி 11

# அமைதி காக்கும் எம்மை சீண்டிப்பார்க்க வேண்டாம்

## எச்சரிக்கிறார் திஸ்ஸ குட்டியாராச்சி

கொழும்பு, செப். 18

அமைதிகாக்கும் தம்மை சீண்ட வேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தேசிய மக்கள் சக்தியினருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின் போதே அவர் இந்த 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**இடபம்**
கணவன் மனைவி அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு அதிகரிக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்சினை வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**சிம்மம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி பெறும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**கன்னி**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக்கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கவனமுடன் இருக்க வேண்டும்.

**தனுசு**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**கும்பம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமையை கிடைக்கும். நன்மை ஏற்படும் நாள்.

# தமிழகத்தில் முழு மதுவிலக்கை தி. மு. க. கொண்டுவர வேண்டும்

## மத்திய இணையமைச்சர் முருகன் வலியுறுத்தல்

விருதுநகர், செப். 18

தமிழகத்தில் முழுமையான மதுவிலக்கை தி. மு. க. அரசு கொண்டுவர வேண்டும் என்று மத்திய இணை அமைச்சர் எல். முருகன் வலியுறுத்தினார்.

விருதுநகரில் பா. ஜ. க. பொறுப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மத்திய இணை அமைச்சர் எல். முருகன் பங்கேற்றார். இதில் உரையாற்றிய அவர் கூறியவை வருமாறு,

திருமாவளவன் நடத்தும் மது ஒழிப்பு மாநாடு ஓர் அரசியல் நாடகம். தமிழக முதல்வர் ஸ்டாலின் அமெரிக்காவுக்கு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க சென்றார். அந்த அளவு முதலீடு இல்லை என்பதால் மது ஒழிப்பு மாநாடு என்ற நாடகத்தை நடத்துகிறார். இந்த அரசு மக்களை திசைதிருப்ப இதை கையில் எடுத்துள்ளது. பா. ஜ. க. ஆட்சியில் உள்ள குஜராத்திலும், கூட்டணி ஆட்சி உள்ள பிஹாரிலும் மதுவிலக்கை கொண்டு வந்துள்ளோம்.

தமிழகத்தில் மதுவிலக்கு வேண்டும் என்பது மக்கள் எதிர்பார்ப்பு. ஆனால், தி. மு. க. அதை செய்யாது- என்றார்.

(எ)

# அடித்து நொறுக்கப்பட்டது சுங்கச்சாவடி மனிதநேய மக்கள் கட்சியினர் ஆவேசம்

திருச்சி, செப். 18

மத்திய அரசு தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கச்சாவடி அமைத்து கட்டணம் வசூலிப்பதைக் கண்டித்து, திருச்சி - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் துவாக்குடியில் உள்ள சுங்கச்சாவடியை முற்றுகையிட்டு மனிதநேய மக்கள் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தஞ்சாவூரில் இருந்து இந்த முற்றுகைப் போராட்டத்தில் கலந்துகொள்ள வந்த வான், கார் உள்ளிட்ட வாகனங்களுக்கு துவாக்குடி சுங்கச்சாவடியில் சுங்கக்கட்டணம் வசூலிக்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த மனிதநேய மக்கள் கட்சியினர் சுங்கச்சாவடியை அடித்து நொறுக்கினர். இதில், சுங்கச்சாவடி கண்ணாடி, கண்காணிப்புக் கமரா, வாகனத் தடுப்பு கட்டைகள் உடைந்து சேதமடைந்தன. இந்த முற்றுகை போராட்டத்தால் திருச்சி - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

(எ)

# தி. மு. கவின் சமூக அநீதிக்கு இன்றுடன் வயது 900 நாட்கள்

## பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் சாடல்



சென்னை, செப். 18

"தமிழகத்தில் வன்னியர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்கலாம் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டு, 900 நாட்கள் ஆகும் நிலையில், சமூக அநீதி கூடாரமாகத் திகழும் மு. க. ஸ்டாலின் தலைமையிலான தி. மு. க. அரசு அந்தத் தீர்ப்பை செயல்படுத்த மறுத்து வருகிறது. சமூக நீதி என்ற பசுத்தோலைப் போர்த்திக் கொண்டு தி. மு. க. அரசு காட்சியளித்தாலும், அது சமூக அநீதி என்ற புலி தான் என்பதை வன்னியர்களுக்கு இழைத்து வரும் துரோகத்தின் மூலம் மீண்டும், மீண்டும் நிரூபித்து வருகிறது" என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் கடுமையாக சாடியுள்ளார்.

"தி. மு. க. அரசின் சமூக அநீதிக்கு இன்றுடன் வயது 900 நாட்கள். ஆம், தமிழகத்தில் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டு, இன்றுடன் 900 நாட்கள் ஆகும் நிலையில் தி. மு. க. அரசு அந்தத் தீர்ப்பை செயல்படுத்த மறுத்து வருகிறது"- என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(எ)

# தி. மு. க. தனித்து ஆட்சியமைக்க முடியுமா?

## நாம் தமிழர் கட்சி சீமான் கேள்வி

காரைக்குடி, செப். 18

"எங்களுடன் சேர்ந்தால் நாட்டு மக்கள் நல்லா இருப்பார்கள் என நினைப்பவர்கள் கூட்டணி வைக்கலாம்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார். மேலும், "தி. மு. க. தேர்தலில் தனித்து நின்று ஆட்சி அமைக்க முடியுமா?" என்றும் சீமான் கேள்வி எழுப்பினார்.

காரைக்குடியில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியவை வருமாறு, "தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிப்பதாக இலங்கை கூறுகிறது. கேரள மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பது இல்லையா? இங்கு மீனவர்கள் என்பது பிரச்னை அல்ல. தமிழன் என்பதுதான் பிரச்னை. மற்ற மாநிலத்தவரை மொட்டை அடித்திருந்தால் இந்த நாடும், அரசும் சும்மா இருக்குமா? இது தமிழக மீனவர்களுக்கு அடித்த மொட்டை இல்லை. மத்திய - மாநில அரசுகளுக்கு அடித்த மொட்டை. தமிழகத்தில் 39 எம்.பிக்கள் இருந்தும் என்ன பயன்? கச்சதீவை மீட்க வழியில்லை.

தி. மு. க. தேர்தலில் தனித்து நின்று ஆட்சி அமைக்க முடியுமா? கூட்டணியில் வெற்றி பெற்றதை தனிப் பெரும்பான்மை என்று கூறுவது சரியில்லை. திருமாவளவனின் கோட்பாட்டை பாராட்டுகிறேன். மத்திய ஆட்சியில் மட்டும் கூட்டணிக்கு பங்கு. மாநில ஆட்சியில் கூட்டணிக்கு பங்கு கிடையாதா? தமிழகத்தில் பூரண மதுவிலக்கு சாத்தியமே. அண்ணா, இராஜாஜி, காமராஜர் ஆட்சி காலத்தில் மதுவிலக்கு இருந்தது. மதுவிலக்கை நீக்கியது கருணாநிதிதான்"- என்றார்.

(எ)

# "ஒப்பந்தங்களால் எத்தனை பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்?"

காஞ்சிபுரம், செப். 18

தி. மு. க. செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் எத்தனை நிறுவனங்கள் தமிழகம் வந்துள்ளன் எத்தனை பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர் என்பதை தெரிவிக்க வேண்டும் என்று அ. தி. மு. க. முன்னாள் பொதுச் செயலர் சசிகலா தெரிவித்தார்.

அண்ணா பிறந்த நாளையொட்டி காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணா நினைவு இல்லத்துக்கு சசிகலா வந்தார். அவர் அண்ணாவின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். அண்ணாவின் இல்லத்தையும் அவரது புகைப்படங்களையும் சுற்றிப் பார்த்தார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
18.09.2024 புதன்கிழமை
குரோதி வருடம், புரட்டாதி 02

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எது பெரிய கட்சி?

இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாகத் தீர்மானமொன்றை நிறைவேற்றியிருக்கின்றது. இந்தத் தீர்மானத்தை எதிர்க்கும் தமிழ் அரசுக் கட்சியினரும் இருக்கின்றனர். இதில், முதன்மையானவர் சிவஞானம் சிறீதரன். ஆனால், கட்சியின் உத்தியோகபூர்மான முடிவு சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதும் - தமிழ்ப் பொது வேட்பாளரை தோற்கடிப்பதுமாகும். இந்தப் பின்புலத்தில் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தீர்மானத்தின் சூத்திரதாரியுமான சுமந்திரன், சஜித்துக்கு ஆதரவான பிரசாரக் கூட்டத்தில் பேசுகின்றார். சஜித்தின் மேடையில் நின்றவாறு தமிழ்ப் பொது வேட்பாளரை தோற்கடிக்கப் போவதாக சூளுரைக்கிறார்.

தமிழ் அரசுக் கட்சி ஒரு பெரிய கட்சி. அந்தக் கட்சி சொல்வதைத்தான் தமிழ் மக்கள் கேட்பார்கள் என்பதுதான் தமிழ் அரசுக் கட்சியின் புரிதல். உண்மையில், எது பெரிய கட்சி? ஒரு மக்கள் கூட்டத்தை வழிநடத்துவது என்பது வெறுமனே தீர்மானங்களில் தங்கியிருக்கும் ஒன்றல்ல - மாறாக, எந்தக் காலத்தில் என்ன தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்பதில்தான் தங்கியிருக்கின்றது.

முன்னர் எடுத்த தீர்மானங்களுக்கு என்ன நடந்தது என்பதைப் புரிந்து கொண்டுதான் புதிய தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பதினைந்து வருடங்களில் சுமந்திரனால் மேற்கொள்ளப்பட்ட ஒரு விடயம் கூட வெற்றிபெறவில்லை. 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, புதிய அரசியல் யாப்புக் கதையொன்று சொல்லப்பட்டது. தீர்வைத் தொடும் தூரத்தை நெருங்கிவிட்டோம் என்றவாறே பேசப்பட்டது.

ஆனால், என்ன நடந்தது? சுமந்திரனின் அனைத்து நகர்வுகளும் தோல்வியடைந்தன. ஆயுதப் போராட்டமும் தோல்வியடைந்தது தானே, அதற்காக அவர்களை எவருமே குற்றஞ்சாட்டுவதில்லையே என்று கேள்விகள் வேறு. ஆயுதப் பேராட்டம் தோல்வியில் முடிவுற்றது உண்மை. ஆனால், அதற்கான உச்சபட்சமான அர்ப்பணிப்பை - தியாகத்தை அவர்கள் செய்திருந்தனர். அந்தத் தோல்விக்கு உள்ளகக் காரணங்களை விடவும் சர்வதேச காரணங்களே அதிகம். அதனை ஜனநாயக தளத்தில் இழைக்கப்படும் தவறுகளோடு ஒப்பிட முடியாது.

கடந்தகாலத்தில் இடம்பெற்ற எந்தவொரு தவறிலிருந்தும் பாடம் கற்றுக்கொள்ளாமல் தமிழ் அரசுக் கட்சி மீண்டும் ஒரு தவறான தீர்மானத்தை எடுத்திருக்கின்றது. பெரிய கட்சி என்னும் தகுதியைக் கொண்டே இந்தத் தவறான தீர்மானத்தை எடுத்திருக்கின்றது. பெரிய கட்சி என்பது மக்களை எந்தச் சூழலில் எவ்வாறு வழிநடத்துவது என்னும் புரிதலிலிருந்து தீர்மானங்களை எடுப்பதாகும். அவ்வாறில்லாதபோது, பெரிய கட்சி என்பது வெறும் உச்சரிப்பு மட்டும்தான். தமிழ் அரசுக் கட்சியை பெரிய கட்சியென்று கூறுவதும் இந்த அடிப்படையைக் கொண்ட ஒன்றுதான். தமிழ் அரசுக் கட்சி இப்போது பெரிய கட்சியல்ல மாறாக, மிகவும் பலவீனமான - பரிகசிப்புக்குரிய ஒரு கட்சியாகவே காட்சியளிக்கின்றது.

இது பெரிய கட்சி - சிறிய கட்சி என்று விவாதங்கள் புரியும் காலமல்ல - மாறாக, அனைவரும் முடிந்தவரையில் ஓர் ஐக்கிய முன்னணியாக செயல்படுவதற்கான காலமாகும். இதனை உணராத - திருந்தாத கட்சிகள் தமிழ் மக்களுக்கான கட்சிகளாகத் தொடர்ந்தும் நிலைக்கும் தகுதியற்றவைகளாகும்.

# அவசர அவசரமாக அகற்றப்பட்ட மன்னார் பால சோதனைச்சாவடி

மன்னார், செப். 18

மன்னார் பிரதான பாலத்தில் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகள் மற்றும் சோதனைச் சாவடிகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை அவசர அவசரமாக அகற்றப்பட்டுள்ளன.

முன்னதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் வருகையின்போது பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் முன் வைத்த கோரிக்கைக்கு அமைவாக குறித்த சோதனைச் சாவடி அகற்றப்பட்டு சோதனை நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

இருப்பினும் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டு ஒரு வார காலத்தில் மீண்டும் சோதனைச் சாவடி மற்றும் வீதி தடைகள் பிரதான பாலத்தில் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு நேற்று பிரசார நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னார் மாவட்டத்துக்கு சென்றார்.

இதனால் பிரதான பாலத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த வீதி தடைகள் மற்றும் சோதனைச் சாவடிகள் அடையாளம் தெரியாத வகையில் வீதிகளில் இருந்து அகற்றப்பட்டன. (அ)

## சுற்றுலா சென்ற பஸ் விபத்து; மாணவர்கள் சிலருக்கு காயம்

கொழும்பு, செப். 18

கம்பளை - நுவரெலியா வீதியில் பலகொல்லை பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் பாடசாலை மாணவர்கள் சிலர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

சுற்றுலா செல்வதற்காகப் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த தூணுடன் மோதியது. விபத்தின் போது, பயணித்த மாணவர்கள் சிலர் காயமடைந்தனர். அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களின் உடல் நிலை கவலைக்கிடமாக இல்லை என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ)

## ஹெரோயினுடன் மீனவர் கைது!

கொழும்பு, செப். 18

பேருவளை பகுதியில் மீனவர் ஒருவரின் வீட்டிலிருந்து 75 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கடலிலிருந்து மீட்கப்பட்ட பொதியிலிருந்தே குறித்த ஹெரோயின் தமக்குக் கிடைத்ததாக சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (அ)

# ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க நாடு முழுவதும் 17 கோடி பேர் தகுதி

கொழும்பு, செப். 18

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு 17 கோடியே 14 இலட்சத்து 354 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு கொழும்பு மாவட்டத்திலிருந்து 1,765, 351 பேரும், கம்பஹா மாவட்டத்திலிருந்து 1,881, 129 பேரும், களுத்துறை மாவட்டத்திலிருந்து 1,024, 244 பேரும், கண்டி மாவட்டத்திலிருந்து 1,191,399 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 429,991 பேரும், நுவரெலியா மாவட்டத்திலிருந்து 605,292 பேரும், காலி மாவட்டத்திலிருந்து 903,163 பேரும், மாத்தறை மாவட்டத்திலிருந்து 686,175 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து 520,940 பேரும் தகுதி பெற்றுள்ளனர்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து 593,187 பேரும், வன்னி மாவட்டத்திலிருந்து 306,081 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 449,686 பேரும், திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து 555,432 பேரும், திருகோணமலை மாவட்டத்திலிருந்து 315,925 பேரும், குருணாகல் மாவட்டத்திலிருந்து 1,417,226 பேரும், புத்தளம் மாவட்டத்திலிருந்து 663, 673 பேரும், அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து 741, 862 பேரும், பொலநறுவை மாவட்டத்திலிருந்து 351, 302 பேரும், பதுளை மாவட்டத்திலிருந்து 705, 772 பேரும், மொனராகலை மாவட்டத்திலிருந்து 399, 166 பேரும், இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து 923,736 பேரும் கேகாலை மாவட்டத்திலிருந்து 709,622 பேரும் தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22ஆம் திகதி ஜனாதிபதியாக ரணில் மீண்டும் பதவியேற்பார்!

## கூறுகிறார் வேலுகுமார் எம்.பி.

கொழும்பு, செப். 18

**"அஸ்வசும கொடுப்பனவை மலையக பெருந்தோட்ட பகுதிகளுக்கு விரிவுபடுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நடவடிக்கை எடுத்தார்." - என்று கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.**

கம்பளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மலையக பெருந்தோட்ட மக்கள் கடந்த காலங்களில் ஓரங்கப்பட்டும் நிலை இருந்தது. குறிப்பாக நிவாரண கொடுப்பனவுகளின் போது, ஏதோ ஒரு காரணம் காட்டி தோட்ட மக்கள் தட்டி கழிக்கப்படுகின்றனர். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அஸ்வசும கொடுப்பனவை மலையக பெருந்தோட்ட பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு முதல் ரணில் விக்ரமசிங்க, பிரதமராக இருந்த அரசாங்கத்திலேயே மலையக மக்களுக்கு அதிகபட்சமான வேலைகள் நடைப்பெற்றன.

தனி வீட்டு திட்டத்துடனான புதிய கிராமங்கள், நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச சபைகளின் அதிகரிப்பு மற்றும் பிரதேச செயலகங்கள் அதிகரிப்பு என பல விடயங்



களை கூறிக்கொண்டு போக முடியும். எதிர்வரும் 22 ஆம் திகதி எமது நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதவியேற்பது உறுதி.

அதன் பின்னர் அன்று நாம் நிறுத்திய வேலை திட்டங்களை மீண்டும் ஆரம்பித்து முன்கொண்டு செல்ல முடியும். எனவே நாட்டுக்கும் நமக்கும் வெற்றி கிட்டும் வழி ரணிலின் வழியே ஆகும்-என்றார்.

(அ)

# தேசிய மக்கள் சக்தியினர் குறித்து போலி பிரசாரம்!

## நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

தேசிய மக்கள் சக்தியினர் வன்முறையை கையில் எடுத்துள்ளதாக போலிப்பிரச்சாரம் மேற்கொள்ளப்படுவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகவுள்ளனர். ஆட்சியாளர்களே அச்சத்தில் உள்ளனர். ஆகவே ஏனைய அனைத்து கட்சிகளும் தேசிய மக்கள் சக்தியினரை வன்முறையாளர்களாக சித்தரிக்கும் விடயத்தை மேற்கொள்ள எத்தனிக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தியினர் தமக்கு வாக்களிக்காதவர்களை அச்சுறுத்தும் வகையான விடயத்தை மேற்கொள்வதாக கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறு தொலைபேசி அழைப்புக்கள் வந்தால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதேபோன்று நாமும் முறைப்பாட்டை பதிவு செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

மேலும் தேசிய மக்கள் சக்தியின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட ஆடைகளை அணிந்து அச்சுறுத்தும் வகையிலான மற்றும் வன்முறையான விடயங்களில் எவரும் ஈடுபட்டால் அது குறித்து பொலிஸ் நிலையத்தில் உடனடியாக முறைப்பாட்டை பதிவு செய்யுமாறு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். எமக்கு எதிரான தரப்பினரே இவ்வாறு பொய்யான விடயங்களை மேற்கொண்டு தேசிய மக்கள் சக்திக்கு தவறான பெயரை உருவாக்க எத்தனிக்கின்றனர் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்-என்றார்.

(அ)



# யாழ்ப்பாண வணிகர் கழகம் அரியநேத்திரனுக்கு ஆதரவு!

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினருக்கும் தமிழ்ப்பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கும் இடையிலான சந்திப்பு கழகக் காரியாலத்தில் இடம் பெற்றது.

இதன்போது தமது முழுமையான ஆதரவினை தமிழ்ப்பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு வழங்குவதாக தெரிவித்தமையுடன் ஆதரவு தெரிவித்து அறிக்கை ஒன்றினையும் அவர்கள் வெளியிட்டனர்.

அந்த அறிக்கையில்-

கடந்த 75 வருடங்களாக தமிழர்கள் தங்கள் உரிமைக்காக பலவகையில் போராடி இலங்கை அரசு தமிழ் மக்களுக்கான எந்த தீர்வையும் இதுவரை வழங்கவில்லை. பல ஒப்பந்தங்கள், பல வட்டமேசை மாநாடுகள் பல பேச்சுவார்த்தைகள், பல வாக்குறுதிகள் நடைபெற்றும் எதையும் நிறைவேற்றவில்லை.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற ஆகக்குறைந்த அதிகாரமான 13 ஆம் அரசியலமைப்பு திருத்தத்தைக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தாது, தந்தை செல்வா தொடக்கம் சம்பந்தர் ஐயா வரை ஏமாற்றப்பட்டார்கள்.

ஆகவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை எமது தீர்வுக்கான புதிய அணுகுமுறையாக இந்த அணுகி ஒவ்வொரு தமிழ் மக்களும் இதனை பயன்படுத்தி சங்குச் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்-என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# எதிர்வரும் 106 மணித்தியாலங்களில் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாவார்!

## டலஸ் அழகப்பெரும கூறுகிறார்

கொழும்பு, செப். 18

எதிர்வரும் 106 மணித்தியாலங்களில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச நாட்டின் ஜனாதிபதியாவார் என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்குள் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நிறைவடையவுள்ளன.



எதிர்வரும் 106 மணித்தியாலங்களில் நாட்டின் 9 ஆவது நிறைவேற்றுஅதிகார ஜனாதிபதி யார் என்பது அறிவிக்கப்படவுள்ளது. இந்த தேர்தலை நிறுத்துவதற்காக ஜனாதிபதி தலைமையிலான அணியினர் பல முயற்சிகளை மேற்கொண்டனர். இருப்பினும், ஜனாதிபதி தேர்தலுக்கு செல்ல கிடைத்தமை மக்களுக்கு கிடைத்த ஜனநாயக வெற்றியாகும்.

அதேபோன்று 106 மணித்தியாலங்களில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச நாட்டின் 9 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாவார் என்பதை உறுதிபடத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

அந்த வகையில் இந்த வெற்றியை தோல்வியடைந்தவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் கொண்டாட வேண்டும் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்-என்றார்.

(அ)

# நன்றிக்கடனாக ரணிலுக்கு வாக்களிப்பது நமது கடமை

## அதாவுல்லா சொல்கிறார்

அட்டாளைச்சேனை, செப். 18

நாட்டைப்பற்றிச் சிந்தித்து நன்றிக்கடனாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிப்பது நமது கடமையாகும். கட்சிக்காக மக்கள் அல்ல. மக்களுக்காகவே கட்சி இருக்க வேண்டும். ரவுப் ஹக்கீம் மக்களை ஏமாற்றுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது- இவ்வாறு தேசிய காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எல். எம். அதாவுல்லா தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதான வீதியில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அதாவுல்லா மேற்கண்டவாறு கூறினார்.

(அ)





# 45 நாட்களுக்குள் பொதுத்தேர்தல்!

## அநுரகுமார கூறுகிறார்

கொழும்பு, செப். 18

"தற்போதைய பாராளுமன்றம் ஒழுக்கமற்றவர்களின் கூடாரமாக மாறியுள்ளது. எனவே, ஜனாதிபதி தேர்தலில் வென்றதும் ஒன்றரை மாதத்துக்குள் பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படும்." - என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் பெரஹர மற்றும் திருவிழா என்பன நிறுத்தப்படும் என பிரசாரம் முன்னெடுக்கின்றனர். இதுகூட இனவாத பிரசாரம்தான். தெற்குக்கு செல்லும்போது ரிஷாத்தை ஒளித்துவிட்டு சம்பிக்கவை அழைத்து செல்கின்றனர். மன்னார் செல்லும்போது சம்பிக்கவை மறைத்துவிட்டு ரிஷாத்தை அழைத்து செல்கின்றனர். இதுதான் அவர்களின் அரசியல்? நாம் வடக்கு, கிழக்கு, தெற்கு என எல்லா இடங்களிலும் ஒன்றைதான் குறிப்பிடுகின்றோம்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதும் கூடியவிரைவிலேயே பாராளுமன்றம் கலைக்கப்படும். தற்போதைய பாராளுமன்றத்தில் தூசனம் கதைக்கின்றனர், கப்பம் வாங்கிவிட்டு சிறைக்கு சென்றவர்கள், கொலை செய்தவர்கள் என ஒழுக்கமற்றவர்களின் கூடாரமாக மாறியுள்ளது. இப்படியொரு பாராளுமன்றம் தேவையில்லை. எனவே, ஒன்றரை மாதத்துக்குள் நாம் பாராளுமன்ற தேர்தலை நடத்துவோம். தற்போதுள்ள உறுப்பினர்களில் 150 பேரையாவது வீட்டுக்கு அனுப்ப வேண்டும்."
- என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு உட்பட நாடு பூராக ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு அலை

## பதுளையில் ஓர் இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி



பதுளை, செப். 18

**"ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வீதியில் வரிசையில் நிற்க வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு பகுதியைச் சேர்ந்த மக்கள் மட்டுமன்றி முழு நாட்டு மக்களும் விரும்பவில்லை. இதனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளது"- இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.**

"பதுளையில் ஓர் இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ஜனாதிபதி ரணில் வெற்றி பெறுவார்" என்றும் அவர் கூறினார்.

பதுளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசார கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய பகுதிகளில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு பெருகி வருகிறது. கடந்த ஒரு வார காலத்தில் செல்லும் இடமெல்லாம் ஜனாதிபதி ரணிலுக்கான ஆதரவு வலுப்பெற்றுள்ளது. அதற்கான காரணத்தை ஆராயும் பொழுது, மக்களால் எதிர்வரும் 22 ஆம் திகதிக்குப் பிறகு ஹாஸ், பெற்றோல் வரிசையில் மீண்டும் நிற்க முடியாது எனவும் தாங்கள் ஜனாதிபதி ரணிலை ஆதரிப்பதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பதுளை மாவட்டத்தில் ஓர் இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. எமது மக்களை பொறுத்த மட்டில் சேவை செய்பவர்களுக்கு ஆதரவு வழங்குவதில் மாற்றுக் கருத்து கிடையாது.

நான் ரணில் விக்கிரமசிங்கவுக்காக பிரசாரம் செய்ய வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என நான்கு திசைகளிலும் சென்றுள்ளேன். அவருக்கான ஆதரவு அதிகமாகவே உள்ளது.

ஜனாதிபதியின் வெற்றிக்குப் பின்னால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்களும் உள்ளனர். அதேபோன்று, தேர்தலுக்குப் பின் மலையக மக்களின் வெற்றிக்குப் பின்னால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்க வேண்டும்" என்றும் செந்தில் தொண்டமான் தெரிவித்தார். (எ)

# தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் ஊழல் ஒழிப்பு போலி வாக்குறுதி

## இம்ரான் எம். பி. தெரிவிப்பு



திருகோணமலை, செப். 18

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் ஊழல் ஒழிக்கப் படும் என்று தேர்தல் மேடைகளில் போலி வாக்குறுதி வழங்கப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"நாட்டில் தற்போது வலுவான ஊழல் ஒழிப்பு சட்டங்கள் உள்ளன. இதன் மூலம் இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு பலப்படுத்தப் பட்டுள்ளது.

இதனடிப்படையில் தான் முன்னாள் அமைச்சர் பௌசி போன்றோருக்கு அண்மையில் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தன்னிடம் 400 பேரின் ஊழல் சம்பந்தமான கோப்புகள் உள்ளதாக தெரிவித்தார்.

அப்படியாயின் ஏன் இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் இது தொடர்பில் முறைப்பாடு எதுவும் செய்யவில்லை என்று கேட்க விரும்புகின்றேன்.


தற்போது தகவல் பல தன்னிடம் இருப்பதாக கூறும் அநுர அது குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்காது, அதிகாரம் கிடைத்த பின்னர் நடவடிக்கை எடுப்பேன் என்று குறிப்பிடுவது வேடிக்கையாக உள்ளது.

எனவே, அதிகாரம் கிடைத்தால் கூட ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்க மாட்டார் என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

உண்மையில் அவர் இந்த நாட்டில் ஊழல் ஒழிய வேண்டும் என்று விரும்புவாராயின் தன்னிடம் உள்ள ஆதாரங்களுள் சிலவற்றையாவது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். அப்போது தான் அவர் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைக்கு தயாராகிறார் என்று நம்ப முடியும்.

இதனை விடுத்து மக்களை ஏமாற்றுவதற்காக வெறுமனே மேடைகளில் வாக்குறுதி வழங்குவதில் எந்தப் பலனும் இல்லை"- என்றார். (எ)

# தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து யாழில் பேரெழுச்சிப் பொதுக்கூட்டம்





யாழ்ப்பாணம், செப். 18

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் சார்பில் தமிழ்ப் பொது வேட்பாளராக போட்டியிடும் பா. அரியநேத்திரனை ஆதரித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பேரெழுச்சிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசனின் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரெழுச்சிப் பொதுக்கூட்டத்தில் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சமூக அரசியல் செயல்பாட்டாளரும் கல்வியாளருமான க. அருந்தவபாலன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், மூத்த போராளி மு. மனோகர் (காக்காண்ணா) ஆகியோரும் எழுச்சியுரை ஆற்றினர்.

சூழலியலாளர் கா. சோ. சிவநேசனின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இப் பேரெழுச்சிப் பொதுக்கூட்டத்தில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் ஓர் அங்கமாக வுள்ள தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஏற்பாடு செய்த இந்தப் பேரெழுச்சிப் பொதுக்கூட்டத்தில் மண்டபம் கொள்ளாத அளவுக்கு ஆயிரக்கணக்கானோர் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டிருந்தனர்.

# மனிதநேயத்தின் நாமத்தால் சகலரையும் பாதுகாப்போம்

## சஜித் பிரேமதாஸ வாக்குறுதி



குருநாகல், செப். 18

"சிறீ லங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஏனைய கட்சிகள் அத்தோடு கட்சிகளை சாராத குழுக்களில் உள்ளவர்கள் என அனைவரையும் நாம் அதிகாரத்துக்கு வந்த பிறகு மனிதநேயத்தின் நாமத்தால் பாதுகாப்போம்"- இவ்வாறு ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வாக்குறுதி வழங்கியுள்ளார்.

ஹெட்டிபொல நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சஜித் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"நாட்டில் உள்ள 25 நிர்வாக மாவட்டங்களை மையப்படுத்தி ஜனாதிபதி அபிவிருத்தி செயலணி ஒன்றை உருவாக்குவோம். இதன் ஊடாக அனைத்து நிர்வாக மாவட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை நேரடியாக கண்காணிப்போம். அத்தோடு ஜனாதிபதியை மக்கள் தொடர்பு கொள்வதற்கு தனியான அலகொன்றையும் நிறுவுவோம். மக்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முறையான தொடர்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு கிராமங்களையும் நகரங்களையும் அபிவிருத்தியடையச் செய்யும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம்.

விவசாயிகளுக்கு நிவாரண அடிப்படையில் உரம் வழங்குகின்ற அதேவேளை விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும், ஓட்டோ உரிமையாளர்களுக்கும், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து பேருந்து உரிமையாளர்களுக்கும், அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் நிவாரண அடிப்படையில் எரிபொருளை வழங்குவோம். இந்த எரிபொருள் நிவாரணம் செல்வந்தர்களுக்கு வழங்கப்பட மாட்டாது. எரிபொருள் நிவாரணத்தை தொழிலாளர் வர்க்கத்துக்கே வழங்குவோம். செல்வந்தர்களுக்கும் கோடீஸ்வரர்களுக்கும் எரிபொருள் நிவாரணம் வழங்க வேண்டிய தேவை இல்லை"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர்களிடையே துப்பாக்கிச்சூடு இளம் குடும்பஸ்தர் பரிதாபமாக பலி!

## சம்மாந்துறையில் அதிர்ச்சி சம்பவம்

சம்மாந்துறை, செப். 18

**அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர்ப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 28 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக பலியானார்.**

ஒரு பிள்ளையின் தந்தையான புளொக் மேற்கு 2 பகுதியைச் சேர்ந்த பக்கீர் முகையதீன் றோஜான் என்பவரே சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 10. 45 மணியளவில் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது. ரிப்பிட்டர் ரக துப்பாக்கியே இந்தப் படுகொலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்தள்ளது.

இளைய சகோதரன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர் எனக் கூறப்படும் சந்தேக நபரான மூத்த சகோதரனை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சடலம் சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் உள்ளது.

மேலும், இந்த துப்பாக்கிப் பிரயோகம்சகோதரர்களிடையே ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா? அல்லது வேறு முரண்பாடு காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா? என பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)



# சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்க நடவடிக்கை

சம்மாந்துறை, செப். 18

கிழக்கு மாகாணத்தில் தையல் துறையில் ஆர்வமிக்க யுவதிகளை மையமாகக் கொண்டு அவர்களின் வருமானத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்த கிழக்கின் சுற்றுலா மையம், ஐ. எச். எஸ். தொழில்துறை கம்பஸ் மூலம் எஸ். எப். ஆடை உற்பத்தி கம்பனியின் அனுசரணையுடன் தொழில் முனைவோருக்கான நேர்முகத் தெரிவு சம்மாந்துறையில் நடைபெற்றது.

இந்த நேர்முக தெரிவு மூலம் 100 பேர் குறித்த திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டனர். (எ)



# கல்முனை ஸாஹிரா மாணவனுக்கு புத்தாக்க போட்டியில் தேசிய விருது

கல்முனை, செப். 18

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவன் ஏ. ஏ. எம். ஆதிப் இலங்கை பொறியியலாளர் நிறுவகம் நடத்திய புத்தாக்கப் போட்டியில் தேசிய விருது பெற்றார்.

இலங்கை பொறியியலாளர் நிறுவகம், மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் இணைந்து நாடு தழுவிய ரீதியில் பாடசாலைகளுக்கு இடையில் ஒழுங்கு செய்திருந்த புதிய கண்டுபிடிப்பாளர்களை உருவாக்கும் புத்தாக்கப் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் உயர்தர விஞ்ஞான கணிதப் பிரிவில் கல்வி கற்ற மாணவன் ஆதீப் தனது கண்டுபிடிப்பினை சமர்ப்பித்து கிண்ணத்தையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.

இந்த மாணவன் ஏற்கனவே பல தடவைகள் இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான விருதுகளைப் பெற்றுள்ளதாகவும் இம் மாணவனுக்கு கல்லூரி கல்வி சமூகம் சார்பில் வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதாக அதிபர் எம். ஐ. ஜாபிர் தெரிவித்தார். (எ)

# "ஊழல்வாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யுங்கள்"

கிண்ணியா, செப். 18

"மாற்றம் வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியினர் கூறித் திரிகின்றனர். இவ்வாறு கூறுவோர் முதலில் தங்களை திருத்திக்கொள்ள வேண்டும். ஊழல்வாதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுங்கள்"என்று பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

திருகோணமலை, கிண்ணியாவில் நடந்த கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"மாற்றம் வேண்டுமென தேசிய மக்கள் சக்தியினர் கூறித் திரிகின்றனர். இவ்வாறு கூறுவோர் முதலில் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒய்வூதியத்தை நிறுத்தப்போகிறார்களாம். ஊழல்களை ஒழிக்கப் போகிறார்களாம். கள்வர்களைக் கைது செய்யப்போகிறார்களாம். நான் ஒன்றைக் கூறுகிறேன்.



தேசிய மக்கள் சக்தியின் முன்னாள் எம்.பிக்கள் நாற்பது பேர் பெறும் ஒய்வூதியத்தை முதலில் நிறுத்துங்கள். கள்வர்களைக் கைது செய்வதற்கு பொலிஸ் மற்றும் குற்றவியல் திணைக்களங்கள் உள்ளன. அங்கே சென்று உரியவர்களைப் பற்றி முறையிடுங்கள். நீதிமன்றங்களுக்குச் சென்று ஊழல்வாதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுங்கள். இவற்றை எல்லாம் செய்யாமல், ஜனாதிபதியாக்கினால் தான், இதைச்செய்யலாம் என்பது வேடிக்கையே.

புற்றுநோய் மருந்து மோசடியில் முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கைதாவதற்கு பொதுமக்களே நடவடிக்கை எடுத்தனர். ஆனால், இவற்றைத் தடுக்க தேசிய மக்கள் சக்தியினர் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லையே ஏன்?

எவற்றையுமே செய்யாத இந்த தேசிய மக்கள் சக்தியினர்தான், முஸ்லிம்களுக்காக நாங்கள் எதையும் செய்யவில்லை எனக் கூறுகின்றனர். வடக்கில் 75 பள்ளிவாசல்களைப் புனரமைத்தோம். 25ஆக இருந்த பாடசாலைகளை 99 பாடசாலைகளாக அதிகரித்து, பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கு உதவியது நாங்களே. 20, 000 குடும்பங்களை மீளக்குடியமர்த்தியதும் நாங்களே. ஆனால், இவர்கள் எதுவுமே செய்யாமல், இன்று வாக்குகளுக்காக வேறு வேசத்துடன் எம்மக்களை வேட்டையாட வந்துள்ளனர்"என்று கூறினார். (எ)

# "கடற்கரையோரத்தை நாம் பாதுகாத்தால் கடற்கரையோரம் எம்மை பாதுகாக்கும்"

திருகோணமலை, செப். 18

திருகோணமலை சமுத்திராகம கடற்கரை பிரதேசம் சர்வதேச கடற்கரையோர பாதுகாப்பு தினத்தையொட்டி தூய்மைப்படுத்தப்பட்டது.


இதன்போது, மனிதர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய பல பொருட்கள் அகற்றப்பட்டன.

"கடற்கரையோரத்தை நாம் பாதுகாத்தால் கடற்கரையோரம் எம்மை பாதுகாக்கும்" எனும் தொனிப்பொருளில் சமூக மாற்றத்தை விரும்பும் அமைப்பும், சுற்றாடல் பாதுகாப்பு சமூக அமைப்பு என்பன திருகோணமலை திஸ்ஸ வித்தியாலய மாணவர்களின் பங்களிப்பின் மூலம் இந்தக் கடற்கரையோரத்தை சுத்தம் செய்யும் பணியை முன்னெடுத்தனர்.

கரையோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள், பிரதேச கடற்றொழிலாளர்கள், சமூக ஆர்வலர்கள் பலர் கலந்துகொண்டதுடன், கடற்கரையோரத்தில் காணப்பட்ட பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய கண்ணாடித் துண்டுகள் போன்ற உக்கி அழியாத பொருட்கள் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டன.







# அஷ்ரப் ஞாபகார்த்த நிகழ்வு

கல்முனை, செப். 18

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரப்பின் 24ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் இக்ரஹ் வட்டாரக் கிளைக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதன்போது, அஷ்ரப் முஸ்லிம் சமூகத்துக்கு ஆற்றிய சேவைகள் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டதுடன், அவரின் கடந்த கால செயல்பாடுகள் குறித்த உரைகளும் நிகழ்த்தப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய கண்காணிப்பாளர்கள் தீவிர தேர்தல் கண்காணிப்பு பணியில்!

கொழும்பு, செப். 18

**எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழு நாட்டிற்கு வருகை தந்துள்ளது.**

இது பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழுவின் 200 ஆவது தேர்தல் கண்காணிப்பு பணி ஆகும்.

ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பை ஏற்று பொதுநலவாய பொதுச்செயலாளரால் நியமிக்கப்பட்ட 15 பேர் கொண்ட குழு நாட்டுக்கு வருகை தந்துள்ளது.

இந்த குழுவின் தலைவர் சிசெல்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டேனி பாரே ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது-

பொதுநலவாய அமைப்பின் 200 ஆவது தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட இலங்கைக்கு வருகை தந்துள்ளமை எண்ணி பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

மேலும், பொதுநலவாய அமைப்பின் முழு தேர்தல் சுழற்சி அணுகுமுறையின் ஒரு பகுதியாக, உறுப்பு நாடுகளுடனான அதன் ஈடுபாட்டில், ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் செயல்முறைகளை வலுப்படுத்த உதவுவதற்கும், தேர்தல்களின் போது பொதுமக்கள் பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவத்தை செயல்படுத்துவதற்கும் நாங்கள் இங்கு வருகை தந்துள்ளோம்.

11 ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெற்ற தபால் மூல வாக்களிப்பையும் எங்கள் குழுவினர் கண்காணித்துள்ளனர்.

மேலும், குழுவினர் சிவில் சமூகம், அரசியல் கட்சிகள், பொலிஸ் பிரதிநிதிகளை சந்தித்துள்ளனர். அத்தோடு, தேர்தல் ஆணைக்குழு, சிவில் சமூக பிரதிநிதிகள், தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஊடகங்கள் உட்பட பலரை சந்திக்கவுள்ளனர்.

தேர்தலுக்கு முன்னரான சூழல், வாக்குப்பதிவு நடைபெறும் நாள் மற்றும் தேர்தலுக்கு பின்னரான காலம் ஆகியவற்றின் அனைத்து அம்சங்களையும் கவனித்து தேர்தல் கண்காணிப்புக் குழு மதிப்பீடு செய்யும்.

இந்த குழு 19 ஆம் திகதி முதல் கண்காணிப்பாளர்களை சிறு குழுக்களாக வெவ்வேறு மாகாணங்களுக்கு தேர்தல் முன்னாயத்தங்களை அவதானிக்க மற்றும் அந்தந்த இடங்களில் உள்ள உள்ளூர் பிரதிநிதிகளை சந்திக்க அனுப்பும்.

தேர்தல் நடைபெறும் நாளில் வாக்களிப்பு ஆரம்பம் முதல் நிறைவு, வாக்குகள் எண்ணுதல் மற்றும் முடிவுகள் வெளியாகும் முகாமைத்துவ செயல்முறைகளைக் கண்காணிப்பார்கள்.

மேலும், 23 ஆம் திகதி தேர்தல் கண்காணிப்பு குறித்து அறிக்கை வெளியிடும்.

தேர்தல் செயல்முறையின் பல்வேறு அம்சங்கள் குறித்த பரிந்துரைகளை வழங்கும் இறுதி அறிக்கையை குழு சமர்ப்பிக்கும் -என்றார். (அ)

# இவ்வருடத்தில் மட்டும் 17 டெங்கு மரணங்கள்!

கொழும்பு, செப். 18

கடந்த ஜனவரி மாதம் முதல், நேற்று முன் தினம் வரையான காலப்பகுதி வரை, நாடளாவிய ரீதியில், 38 ஆயிரத்து 167 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்தவகையில், இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள், 17 டெங்கு நோய் பதிவாகியுள்ளன.

அதிகளவான டெங்கு நோயாளர்கள், கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ள நிலையில், அவர்களின் மொத்த எண்ணிக்கை, 9 ஆயிரத்து 481 ஆகும்.

கம்பஹா மாவட்டத்தில் இருந்து, 4 ஆயிரத்து 390 டெங்கு நோயாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் இருந்து, 2 ஆயிரத்து 102 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாகாணங்களின் அடிப்படையில்,

மேல் மாகாணத்தில் இருந்து, 15 ஆயிரத்து 973 பேரும்,

வடக்கு மாகாணத்தில் இருந்து, 4 ஆயிரத்து 742 பேரும்,

மத்திய மாகாணத்தில் இருந்து, 3 ஆயிரத்து 904 பேரும்,

வட மேல் மாகாணத்தில் இருந்து, 2 ஆயிரத்து 527 பேரும்,

தென் மாகாணத்தில் இருந்து, 2 ஆயிரத்து 836 பேரும்,

சப்ரகமுவ மாகாணத்தில் இருந்து, 3 ஆயிரத்து 883 பேரும், டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, ஜனவரி மாதத்தில் 10 ஆயிரத்து 417 பேரும்,

பெப்ரவரி மாதத்தில் 6 ஆயிரத்து 7 பேரும்,

மார்ச் மாதத்தில் 3 ஆயிரத்து 615 பேரும்,

ஏப்ரல் மாதத்தில் 2 ஆயிரத்து 234 பேரும்,

மே மாதத்தில் 2 ஆயிரத்து 647 பேரும்,

ஜூன் மாதத்தில் 3 ஆயிரத்து 319 பேரும்,

ஜூலை மாதத்தில் 4 ஆயிரத்து 506 பேரும்,

ஆகஸ்ட் மாதத்தில் 3 ஆயிரத்து 897 பேரும்,

டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட 14 இளைஞர்கள் கைது!

கொழும்பு, செப். 18

பேஸ்புக் விருந்து ஒன்றில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட 14 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா, நீர்கொழும்பு மற்றும் ஜா-எல பகுதிகளைச் சேர்ந்த மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்ட கூட்டு சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடவத்த நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பேஸ்புக் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விருந்துக்கு பல பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளும் வருகை தந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விருந்தில் இணைந்த இளைஞர்கள் குழுவொன்று விடுதியில் அறைகளை முன்பதிவு செய்து, அறைகளுக்குள் சட்டவிரோத போதைப்பொருளை பயன்படுத்திய போது மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இளைஞர்கள் ஐஸ், கொக்கேன் போன்ற போதைப் பொருட்களை பயன்படுத்தியது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 19 முதல் 30 வயதுடையவர்கள் என மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# ஜனாதிபதித் தேர்தல் மீறல்களை அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

கொழும்பு, செப். 18

தேர்தல் விதிமுறை மீறல்கள் குறித்து அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நேற்று இரவு வெளியிடப்பட்டுள்ள விசேட அறிவித்தலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் விதிமுறை மீறல்கள் மற்றும் மோதல்கள் குறித்து முறைப்பாடு செய்ய விசேட தொலைபேசி இலக்கங்களை தேர்தல்கள் வன்முறைகளை தீர்க்கும் பிரிவு அறிமுகப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தலை சுதந்திரமானதும் மற்றும் நியாயமானதுமான தேர்தலாக நடத்துவதற்கான சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டே இந்த தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இதன்மூலம், வாக்குப்பதிவின் போது இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து பொதுமக்கள் முறைப்பாடு அளிக்க முடியும்.

அதற்கமைய இராஜகிரியவில் அமைந்துள்ள பொதுத் தேர்தல்கள் செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசேட பிரிவை தொடர்பு கொள்ளுமாறு ஆணைக்குழு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

அதற்கமைய 011 2796546, 011 2796549, 011 2796586 மற்றும் 011 2868153ஆகிய தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொண்டு அறியத்தர முடியும்.

அதேபோன்று 011 2796533, 011 2796535மற்றும் 011 2796537 ஆகிய பெக்ஸ் இலக்கங்கள் ஊடாகவும் முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும்.

மேலம் 070 5396999என்ற வட்ஸ் அப் இலக்கத்திற்கும் electionedr@gmail.com pre2024@elections.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும்.

அதேவேளை 011 2796536, 011 2796540 மற்றும் 011 279 6544 என்ற இலக்கங்களின் ஊடாக பொலிஸ் பிரிவுக்கும் தகவல்களை வழங்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

# அரகலய போராட்டக் காணொளிகளை பகிர்ந்தால் சட்ட நடவடிக்கை கட்டாயம்!

கொழும்பு, செப். 18

அரசியல் இலாபத்திற்காக தவறாக வழிநடத்தும் வன்முறைச் சம்பவங்களை தூண்டக் கூடிய குறிப்பாக கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற அரகலய போராட்டம் தொடர்பான காணொளிகளை பகிர்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அருகில் முன்னெடுக்கப்படும் வாகன சோதனைகள் மற்றும் 2022 ஆம் ஆண்டு மே 9 ஆம் திகதி ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த காட்சிகள் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களின் காணொளிகள் சமூக ஊடகங்களில் மீளப் பரப்பப்படுவது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த கால நிகழ்வுகளை கொண்ட குறித்த காணொளிகள் தற்போது நடைபெறுவது போன்று தவறாக சித்தரித்து பொதுமக்களை தவறாக வழிநடத்தி, சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்ற, பிழையான காணொளிகளை சமூக ஊடகங்களில் பகிர்வதைத் தவிர்க்குமாறு பொதுமக்களை வலியுறுத்தினர்.

அத்தோடு, தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் பிழையான தகவல்களை பதிவிடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# ஆய்வகப் பரிசோதனைக் கட்டணத்தை குறைத்த ஜெயவர்தனபுர வைத்தியசாலை!

கொழும்பு, செப். 18

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் ஆய்வக பரிசோதனைகளின் கட்டணத்தை 50 வீதத்தால் குறைக்க தீர்மானித்துள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ரத்ன சிறி ஏ.ஹேவகே தெரிவித்துள்ளார்.

நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற தொற்றாத நோய்கள் தொடர்பான பரிசோதனைகளுக்கு இந்த விலைக் குறைப்பு பொருந்தும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நோயாளிகளின் நிதிச் சுமையை எளிதாக்குவதே இந்த முயற்சியின் முதன்மையான நோக்கமாகும்.

வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்ட 40 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி வைத்தியசாலை நிர்வாகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

வைத்தியசாலை ஆய்வகம் 24 மணிநேரமும் இயங்குகிறது, நோயாளிகளுக்கு தரமான மற்றும் திறமையான சேவையை வழங்குகிறது.

இந்த 50 சதவீத சோதனைச் செலவுக் குறைப்பு, நோயாளிகள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளைக் குறைப்பதன் மூலம் தேவையான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ள ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பெரிய வெங்காயத்தின் விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, செப். 18

சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உள்நாட்டில் பயிரிடப்படும் பெரிய வெங்காயம் கிலோவொன்று 260 ரூபாய் முதல் 280 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பெரிய வெங்காய இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளமையே, விலை அதிகரிப்புக்குக் காரணமென சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தல் வேளையில் தன்னிச்சையான நியமனங்கள்

## இலங்கை சுகாதார சேவை சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 18

**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் தலைவர் வைத்தியர் சாரங்க அழகப்பெரும தேர்தல் சட்டங்களை மீறி தன்னிச்சையான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளை மேற்கொண்டதாக அகில இலங்கை சுகாதார சேவை சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.**

"ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து உடனடியாகத் தேவையில்லாமல் தலைவர் பல நியமனங்களை வழங்கி வருகிறார்.

"ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளை நிறுத்தி வைக்குமாறு பல கோரிக்கைகள் வைக்கப்பட்ட போதிலும், தலைவர் செவிசாய்க்கவில்லை. எனவே, சம்பவங்கள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளோம்" என தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த குருகே தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தேர்தல் ஆணைக்குழு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது தலைவரை தொடர்ந்து நியமனங்களை செய்வதற்கு எத்தனித்துள்ளதாக அவர் கூறினார்.

இது குறித்து தேர்தல் ஆணைக்குழு அதிகாரியிடம் வினவியபோது, இதுகுறித்து பரிசீலிப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையில், அனைத்து ஆட்சேர்ப்புகளும் பதவி உயர்வுகளும் உரிய நடைமுறைகளுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டதாக கலாநிதி சாரங்க அழகப்பெரும தெரிவித்தார்.

"அனைத்து நியமனங்களும் வழக்கமானவை, நடைமுறைகளுக்கு புறம்பாக எதுவும் செய்யப்படவில்லை. மேலும், சம்பந்தப்பட்ட நியமனங்களுக்கு ஆணையத்தின் ஒப்புதலைப் பெற்றுள்ளேன்," என்று அவர் கூறினார். (அ)

# மர வாக்குப் பெட்டிகளுக்கு பதில் அட்டைப் பெட்டிகள்

ශ්‍රී ලංකා මැතිවරණ කොමිෂන් සභාව
இலங்கை தேர்தல் ஆணைக்குழு
Election Commission of Sri Lanka

கொழும்பு, செப். 18

ஜனாதிபதித் தேர்தலில் வாக்குப் பெட்டிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ள அட்டைப் பெட்டிகள் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தேர்தல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் 20ஆம் திகதி தேர்தல் அலுவலர்கள் உரிய வாக்குப்பெட்டிகளை வாக்குச் சாவடிகளுக்கு விடுவிப்பார்கள்.

வாக்குச் சீட்டு பெரிய அளவில் இருப்பதால் இம்முறை மரப்பெட்டிகளுக்குப் பதிலாக அட்டைப் பெட்டிகளை பயன்படுத்த தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி 3 அளவுகளில் அட்டைப் பெட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், வாக்குப்பதிவு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளதாகவும், அரச அதிகாரிகளுக்கு அனைத்து அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் பணிகளில் பங்கேற்கும் அதிகாரிகளுக்கு, அதற்கான ஏற்பாடுகளை தயார் செய்து, குறிப்பிட்ட நாளில் பணிகள் நடைபெறும் இடங்களுக்கு செல்லுமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (அ)

# புலமைப்பரிசில் வினாத்தாள் சமூக ஊடகங்களில் கசிந்ததா?

கொழும்பு, செப். 18

நடந்து முடிந்த ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் வட்ஸ்அப் செயலி மூலம் பரிமாறப்பட்டுள்ளதாகப் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அநுராதபுரத்தில் உள்ள பாடசாலை ஒன்றிலிருந்து குறித்த வினாத்தாள் கசிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், அளவ்வ பகுதியில் மேலதிக வகுப்புகளை நடத்திவரும் ஆசிரியர் ஒருவரால், அந்த வினாத்தாளுக்கு நிகரான வினாத்தாள் வாட்ஸ்அப் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்தநிலையில் குறித்த விவகாரம் தொடர்பில் வினாத்தாளைத் தயாரித்த உரிய அதிகாரிகள் குழுவிடம் இன்று விசாரணை நடத்தப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆறு இலட்சத்துக்கும் மேற்பட்ட தேர்தல் சுவரொட்டிகள் பொலிஸாரால் நீக்கம்!

கொழும்பு, செப். 18

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சட்டவிரோதமாக ஒட்டப்பட்ட ஆறு இலட்சத்து 27 ஆயிரத்து 300 சுவரொட்டிகள் அகற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், 7,900 சுவரொட்டிகள் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 1,500 பனர்கள் அகற்றப்பட்டுள்ளதுடன் 1,100 பனர்கள் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ,மொத்தம் 1,550 கட்அவுட்கள் பொலிஸாரால் அகற்றப்பட்டுள்ளதுடன் 1,600 கட்அவுட்கள் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், 7,600 விளம்பரங்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் பொலிஸாரால் அகற்றப்பட்டுள்ள நிலையில் 10,750 விளம்பரங்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் வரையான காலப்பகுதிக்குள் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சக ஊழியர்களுடன் ஏற்பட்ட முரண்பாட்டில் பொல்லால் தாக்கப்பட்டு ஒருவர் படுகொலை

## ஐந்து பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு, செப். 18

பிபிலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹாமாபொல பிரதேசத்தில் சக ஊழியர்களால் பொல்லால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பிபிலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலை சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது. இரத்தினபுரி, அவிசாவளை பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் ஹாமாபொல பிரதேசத்தில் உள்ள மணல் குவாரி ஒன்றில் பணிபுரிந்து வந்துள்ள நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தனது சக ஊழியர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

இந்த முரண்பாடு எல்லை மீறியதில் சக ஊழியர்களால் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. கொலை செய்யப்பட்டவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக பிபிலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், கொலையுடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பிபிலை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (அ)

# ஜனாதிபதி வேட்பாளரின் ஆதரவாளர்கள் 2பேர் கைது!

கொழும்பு, செப். 18

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்குச் சார்பாக பன்னல - எலபடகம பிரதேசத்தில் சட்டவிரோதமாக சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த ஜனாதிபதி வேட்பாளரின் ஆதரவாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பன்னல பொலிஸார் தெரிவித்தனர். எலபடகம பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகள் சிலர் இரவு நேர சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு சார்பாக சட்டவிரோதமாக சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த ஆதரவாளர்கள் இருவரை கைது செய்ய முயன்றுள்ளனர்.

இதன்போது, இந்த ஆதரவாளர்கள் இருவரும் தங்களிடம் இருந்த பசைகளை பொலிஸ் அதிகாரிகள் மீது கொட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்ற போது பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் அவர்களை துரத்திச் சென்று பிடித்துள்ளனர். (அ)

# புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளைப் படம் எடுத்து சமூக ஊடகத்தில் பகிர்ந்த அதிபர், 6 ஆசிரியர்கள் கைது!

கொழும்பு, செப். 18

அநுராதபுரம் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் பரீட்சை மையத்தில் நடைபெற்ற 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாளைப் புகைப்படம் எடுத்து வட்ஸ்அப் ஊடாக பகிர்ந்த பாடசாலை அதிபரும் ஆறு ஆசிரியர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் நகரம் மற்றும் நொச்சியாகம ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபரும் ஆறு ஆசிரியர்களுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை நாடளாவிய ரீதியில் கடந்த 15 நடைபெற்ற நிலையில் குறித்த பாடசாலையின் பரீட்சை மையத்திற்குள் சென்ற பாடசாலை அதிபர் ஒருவர் பரீட்சையின் முதலாம் வினாத்தாளைப் புகைப்படம் எடுத்து வட்ஸ்அப் ஊடாக பல ஆசிரியர்களுக்குப் பகிர்ந்துள்ளார்.

இது தொடர்பில் பரீட்சை திணைக்களத்திற்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பின்னர், சந்தேக நபர்களின் கையடக்கத் தொலைபேசிகள் பரீட்சை திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த புகைப்படங்கள் அநுராதபுரம், நொச்சியாகம, கொழும்பு ஆகிய பல்வேறு பிரதேசங்களுக்குப் பகிரப்பட்டுள்ளதாகவும் இத்தகைய விடயங்களால் பரீட்சைகள் மீதான நம்பிக்கை இழக்கப்படுவதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பரீட்சை திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. (அ)

# முப்படையினரும் தயார் நிலையில்!

கொழும்பு, செப். 18

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது அவசரநிலை ஏற்பட்டால் துரித கதியில் செயற்பட முப்படைகளும் தயாராகியுள்ளன.

பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள விசேட கோரிக்கைக்கு அமைய முப்படையினரும் களமிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி முப்படையினரும் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 08.00 மணி முதல் கடமைகளில் ஈடுபட உள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று...

வகையில் ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## சார்ள்ஸ்...

இச்சந்திப்பு, சாள்ஸ் நிர்மலநாதனின் இல்லத்தில் இடம்பெற்றது.

இதன் போது, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் கிளை உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் இணைந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

அத்துடன், தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் கிளை இளைஞர் அணியினர் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்களுடன், ஜனாதிபதி கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இந்த சந்திப்பு தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனிடம் வினவியபோது,

இது மரியாதை நிமித்தமான சந்திப்பு எனவும் ஜனாதிபதி தேர்தலில், ஒட்டுமொத்த மன்னார் மக்களின் முடிவே, தனது முடிவு எனவும், மக்கள் யார் பக்கமோ, அவர்களின் பக்கமே தான் எனவும் குறிப்பிட்டார். (அ)

## அரச மருத்துவ...

முன்னெடுக்கும் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, இந்த பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அதற்கமைய, இன்று காலை 8.00 மணி முதல், பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. இதனால், வைத்திய சிகிச்சை அளிப்பதில் இடையூறு ஏற்படலாம்.

இந்த சம்பவம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்வதற்கு, சுகாதார அமைச்சுக்கு, 14 நாள் கால அவகாசத்தை, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வழங்கும்.

அதற்கு சாதாகமான பதில் கிடைக்காவிடின், மாத இறுதியில் இடம்பெறும் மத்திய குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து, அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடக பேச்சாளர் சமில் விஜயசிங்க குறிப்பிட்டார். (அ)

## பெரும்பான்மை...

அந்த நேர்காணலில், ஜனாதிபதி ரணில் 2005 ஜனாதிபதித் தேர்தலின் போது சமஷ்டியை வெளிப்படையாக ஆதரித்தார். ஆனால், அந்தத் தேர்தலில் தோற்றார். ஏனெனில், வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் வாக்காளர்களை வாக்களிக்க விடாது விடுதலைப் புலிகள் தடுத்திருந்தனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்தனர். அந்தச் சமயம் சஜித்துக்காக பிரசாரத்தை முன்னின்று ரணில் நடத்தியிருந்தார் - என்றும் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், தமிழ் பொது வேட்பாளர் போட்டியிடுவது சிங்கள தேசியவாத எழுச்சியை தூண்டலாம் என்ற அச்சம் ஆரம்பத்தில் நிலவியது. ஆனால், அது நடக்கவில்லை. சிங்கள அரசியல் கட்சிகள் தமிழ்ப் பொது வேட்பாளரை கவனத்தில் கொள்ளவில்லை. 25 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையான வாக்குகளையே அவர் பெறுவார். அது ஒரு பெரிய தாக்கமல்ல. எனினும், ஒரு இலட்சம் வாக்குகளுக்கு மேல் அவர் பெற்றால் தமிழரின் ஒரு பகுதியினர் அவரை ஆதரித்தனர் என்ற நிலைப்பாடு ஏற்படலாம்.

நாம் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சி. தலைமைத்துவத்தை வழங்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது. இப்போது அதை செய்யாவிடின் நமக்கே ஆபத்து. நாம் தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் என்ற தகுதியை இழக்கும் நிலை ஏற்படும். நாம் உறுதியாக - எங்கள் சமூகத்தை தெளிவுடன் வழிநடத்த வேண்டும் - என்றும் கூறினார்.

## முதலாம்...

குறித்த விடயம் தொடர்பில் வினாத்தாளைத் தயாரித்த பரீட்சை சபையுடன் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்.

இந்த நிலையிலேயே, குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ)

## ஈராண்டுகளுக்கு...

இரு வருடங்களுக்கு முன்பிருந்த இருண்ட யுகத்தை மறந்துவிடக்கூடாதென தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தி அதன் பிரதிபலன்களை நாட்டு மக்களுக்கு பெற்றுக் கொடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

குளியாபிட்டியவில் நேற்று பிற்பகல் நடைபெற்ற 'ரணிலால் இயலும்' பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நல்ல எதிர்காலத்தை நோக்கி செல்வதா, இல்லையேல் மீண்டும் வரிசைகளில் நிற்கப்போகிறோமா என்பதை நீங்கள் 21 ஆம் திகதி தீர்மானிக்கலாம். நல்ல எதிர்காலமே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும். கஷ்டங்களை மக்கள் விரும்புவதில்லை. உணவு, காஸ், மருந்து, எரிபொருள், உரம் என்று எதுவுமே இல்லாத நேரத்தில் மக்கள் குறித்து சிந்தித்தது யார்?

எவராவது உங்களைப் பற்றி கவலைப்பட்டார்களா? மக்களின் துயரம் அவர்களுக்கு புரிந்ததா? அவர்களுக்கு இதயம் இருந்ததா? மக்கள் இறந்தாலும் பரவாயில்லை. நாங்கள் தப்பிக்க வேண்டும் என்று மட்டுமே சிந்தித்தனர். அதனால் ஓட்டப் போட்டிக்குப் பயன்படுத்தும் நல்ல சப்பாத்துக்கள் இரண்டை வாங்கி சஜித் பிரேமதாசவிடம் கொடுங்கள். மக்கள் கஷ்டத்தில் அழுத நேரத்தில் அநுரவும் சஜித்தும் தப்பியோடினர்.

இன்று நாங்கள் ஒன்றுபட்டு நாட்டைக் காப்பாற்றிய பின்னர். தங்களுக்கும் நாட்டை காப்பாற்ற ஒரு வாய்ப்பு வேண்டும் என்று கேட்கிறார்கள். நீங்கள் எது கேட்டாலும் தருகிறேன், எனக்கு வாக்களியுங்கள் என்று எதிர்கட்சித் தலைவர் சொல்கிறார். எதிர்கட்சித் தலைவர் என்பவர் நாட்டின் மாற்று பிரதமராக இருக்க வேண்டுமே தவிர மாற்று சாரதியாக இருக்ககூடாது.

நாட்டின் பொருளாதாரம் நெருக்கடியில் சிக்கியிருந்த வேளையில் பாடசாலைகளுக்கு சென்று சிறு பிள்ளைகளிடம் தன்னால் நாட்டின் பொருளாதாரத்தை சீர்படுத்த முடியுமென எதிர்கட்சித் தலைவர் கூறிவந்தார். 2022 ஆம் ஆண்டில் அநுரகுமார திசாநாயக்க மக்களுக்கு ஏதாவது உதவிகளை செய்தாரா?

நாங்கள் வரியை அதிகரித்தபோது மக்களுக்கு கஷ்டம் இருந்ததை அறிவோம். அதனை நாம் அறிவோம். பொருட்களின் விலை இரட்டிப்பாகியுள்ளது ஆனால் வருமானம் கூடவில்லை. என்னை மக்கள் திட்டித்தீர்த்ததையும் பொருட்படுத்தாமல் நான் நாட்டுக்கு தேவையான தீர்மானங்களை எடுத்தேன். அதன் பலனாக இன்று ரூபாயின் பெறுமதி அதிகரித்திருக்கிறது. பொருட்களின் விலையும் குறைந்துள்ளது.

அன்று ஒருவேளை உணவை தவிர்த்துவிட்டு பிள்ளைகளை பிரத்தியேக வகுப்புக்கு அனுப்ப வேண்டிய நிலையில் பெற்றோர் இருந்தனர். ஆனால், இன்று சாப்பாட்டு வேளையில் முட்டையும் சேர்த்துக் கொள்ளலாம் என்ற நிலை உருவாகியிருக்கிறது. இன்னும் சில தினங்களில் 2 வேளையும் முட்டை சாப்பிடும் நிலையை உருவாக்குவோம்- என்றார். (அ)

# புலிகளென கைதாகி சிறையில் இருப்பவர்களை விடுவிப்பேன்!

## மன்னாரில் ரணில் தெரிவிப்பு

மன்னார், செப். 18

புலிகளுடன் தொடர்புபட்டுக் கைதாகி சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்ய முயற்சி செய்வதோடு மன்னாரை மேம்படுத்தி பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாகவும், இவையெல்லாம் செயற்படுத்த 21 ஆம் திகதி நீங்கள் சிலிண்டருக்கு வாக்களியுங்கள் நாம் வெல்வோம் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மன்னார் நகரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னாரில் பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் நோக்கிலேயே இங்கு வருகை தந்திருக்கிறேன். மன்னாரில் பாரிய வளமுள்ளது. அதில் ஒன்று சூரிய சக்தி. அதை நாம் முழுமையாக பயன்படுத்துவோம். மன்னாரை சூரிய சக்தியின் மத்திய நிலையமாக மாற்றுவோம்.

மன்னார் கடலில் இருந்து நல்ல காற்று வீசுகிறது. அதையும் பயன்படுத்துவோம். அந்த சக்தி இந்தியாவிற்கும் தேவைப்படுகிறது.

புலிகளுடன் தொடர்புபட்டுக் கைதாகி சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்ய முயற்சிப்போம்- என்றார். (அ)

## இறுதிக்கட்ட...

பிரசாரக் கூட்டங்களை கொழும்பை மையப்படுத்தி நடத்த உள்ளனர். இதற்காக கொழும்பில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பாராளுமன்றத்தை கலைப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட கூடுமொன சில கருத்துகள் சமூகத்தில் பகிரப்பட்டு வருகின்றன.

ஆனால், அத்தகைய முயற்சிகள் எதனையும் அரசாங்கம் செய்யாதெ ன அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றால் 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரே பாராளுமன்றம் கலைக்கப்படும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்திருந்தார்.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமாச மற்றும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் தாம் வெற்றி பெற்ற பின்னர் பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்த உள்ளதாக கூறியுள்ளனர்.

இந்த நிலையில் அண்மையில் இடம்பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கருத்து வெளியிட்ட அநுரகுமார திஸநாயக்க,

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றதும் பாராளுமன்றம் கலைக்கப்படுவது உறுதியாகும். அதேபோன்று ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கான வழிமுறைகளும் தேசிய மக்கள் சக்தியிடம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (அ)

## வல்லிபுர...

இவர் வேம்படி மகளிர் கல்லூரியின் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

நேற்றைய தினம் நடந்த சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவைக் காண பல பாகங்களிலும் இருந்தும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கூடியிருந்தனர். வழமைபோன்று வல்லிபுர ஆழ்வார் தீர்த்தமாடிய பின்னர், பக்தர்கள் கடலில் இறங்கி நீராடினர். இதன்போது, உயிரிழந்த நபர் நீரில் மூழ்கியுள்ளார். அவரை மீட்ட அங்கிருந்த மக்கள் - கடற்கரையை அண்டிய பரப்பு மணல் நிறைந்தது என்பதால் சுமார் 1.5 கிலோமீற்றர் தூரம் அவரை ட்ராக்டரில் கொண்டு சென்று, பின்னர் அம்புலன்ஸ் மூலமாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

ஆனால், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மாலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்த நிலையில், இரவு சுமார் 8.30 மணியளவில் கடலில் நீராடிக் கொண்டிருந்தவர்களில் ஒருவரை காணவில்லை என்று தெரிய வந்தது. இதையடுத்து நேற்றிரவு கடற்படை மற்றும் அந்தப் பகுதி மீனவர்களின் உதவியுடன் அவரைத் தேடும் பணி தொடர்ந்தது. நீண்ட நேரத் தேடுதலில் அவர் மீட்கப்படவில்லை.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## உணவு, சுகாதார...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உணவு, கல்வி மற்றும் சுகாதாரத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வற் வரியை முற்றிலும் நீக்க தேசிய மக்கள் சக்தி எதிர்பார்த்துள்ளது.

மின் கட்டணம் குறைப்பு மிகக் குறுகிய காலத்திற்குள் செயல்படுத்தப்படும். வாழ முடியாமல் தவிக்கும் குடும்பங்களுக்கு 10,000 ரூபாயும், மிகவும் கஷ்டப்படும் குடும்பங்களுக்கு 17,500 ரூபாயும் வழங்கப்படும்.

அரசியலை பொதுச் சேவையாக மாற்ற வேண்டும் என்பதே இலக்கு. ரணில் வெற்றி பெறாவிட்டால் எரிவாயு வருவதும் எரிபொருள் வருவதும் நின்றுவிடும் என்கிறார்கள். ரணில் அரேபியாவின் சுல்தானா அல்லது அவரது வீட்டில் எரிவாயுக் கிணற்றை வைத்துள்ளாரா?.

இராஜதந்திர உறவுகள் அரசாங்கங்களுடன் தான் கட்டியெழுப்பப்படுமே தவிர தனிநபர்களுடன் அல்ல. அதனால், எமது ஆட்சி பற்றி மக்களை அச்சப்பட வைக்கும் முயற்சிகள் குறித்து மக்கள் அவதானம் செலுத்த தேவையில்லை.

சுதந்திர பொருளாதார உடன்படிக்கைகள் ரத்துசெய்யப்படும் என போலியான கதைகளை பரப்பி வருகிறார் ரணில். அவ்வாறு செய்ய நாம் முட்டாள்கள் அல்லர். ஆனால், அவற்றில் செய்ய வேண்டிய மாற்றங்கள் உள்ளன. அதனை செய்வோம்-என்றார். (அ)

## அமைதி காக்கும்...

எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அநுரகுமார திசாநாயக்க அணியினர் மக்களை அச்சுறுத்துவதான தகவல்கள் வெளியாகியுள்ளது. மே 9 ஆம் திகதியுடன் எம்மை கட்டுப்படுத்த எண்ணாது ஜனநாயக ரீதியில் அரசியலை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நாம் சட்டம் நீதிக்கு மதிப்பளிப்பவர்கள். அமைதிகாக்கும் எம்மை சீண்டாது இருக்குமாறு அநுரகுமார திசாநாயக்கவிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். அதேபோல் எவர் எதிரில் வந்தாலுடம் 100 பேர் மரித்தேனும் நாமல் ராஜபக்ஷவை 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியாக்குவோம் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கனடிய தமிழர் தேசிய அவை பொது வேட்பாளருக்கு ஆதரவு

## அவரது தேர்தல் அறிக்கைக்கும் வரவேற்பு

யாழ்ப்பாணம், செப். 18

**நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்ப் பொது வேட்பாளரால் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையை கனடிய தமிழர் தேசிய அவை வரவேற்று அதற்கான முழுமையான ஆதரவையும் தெரிவிக்கிறது.**

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்-

சிவில் சமூகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய அமைப்புகள், மாணவர் அமைப்புகள், தமிழர் தாயகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் என்பன இணைந்து "தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு" என்ற ஆற்றலுள்ள அணியாக ஒன்றிணைந்துள்ளன. இந்த ஒன்றிணைவின் ஊடாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் அறிவிப்பும், வேட்பாளர் அறிக்கையையும் வெளிவந்துள்ளன.

இந்த ஒற்றுமையானது, தமிழ் மக்களின் கூட்டு அடையாளத்தை வலுப்படுத்துவதற்கு ஒரு புதிய நம்பிக்கையையும் வலுவான அடித்தளத்தையும் தருகிறது. இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்கள் எவரும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டாது, தமிழ் மக்களை அடிபணியச் செய்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு அதிகாரத்திற்காகப் போட்டி போட்டு வருகின்றனர்.

ஆங்கிலேயர்கள் இலங்கைத் தீவை விட்டு வெளியேறியதிலிருந்து கடந்த 76 ஆண்டுகளாக இந்நிலைமை தொடர்கிறது. ஏனைய வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது என்பது தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதையும், தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் தமிழின அழிப்பையும் ஏற்றுக் கொள்வதற்கு ஒப்பானதாகும்.

எனவே, தமிழ் மக்கள் இத்தேர்தலைப் பயன்படுத்தி, தமது நிலைப்பாடு குறித்து அனைவருக்கும் ஒரு தெளிவான செய்தியை அறிவிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய பொது வேட்பாளர் பின்வரும் முக்கிய விடயங்கள் உள்ளடக்கிய தேர்தல் அறிக்கையை வெளியிட்டு இருக்கின்றார். (1) தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய ஒரு தேசம். (2) மாறி மாறி ஆட்சிக்கு வந்த இலங்கை அரசுகளின் இனவழிப்புகளால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர். (3) இலங்கை அரசுகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்புக்கான சர்வதேச விசாரணை மற்றும் தண்டனை வழங்கும் பொறிமுறை, தமிழின அழிப்புக்கான பரிகார நீதி என்பவற்றை தமிழ் மக்கள் கோருகின்றனர்.

தமிழர் தாயகப் பகுதிகளில் வாழும் தமிழர், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் அறிக்கைக்கு வாக்களிக்கிறீர்கள். தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு கொடுப்பதன் ஊடாக ஒரு தெளிவான செய்தியை கொடுக்கின்றீர்கள்.

தமிழ் மக்களாக ஒன்றிணைந்து எமது மக்களின் நியாயமான வேணவாக்களை நிறைவேற்றுவதற்கான கூட்டுச் செயல்பாட்டை தொடங்குவோம்- என்றுள்ளது. (அ)

# கிளப் வசந்த கொலை; மேலும் ஒருவர் கைது

கொழும்பு, செப். 18

கிளப் வசந்த என்று அழைக்கப்படும், சுரேந்திர வசந்த பெரேராவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய, மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக, மேல் மாகாண தெற்கு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அளுத்கம தர்கா நகரில் வசிக்கும், 24 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், கிளப் வசந்தவை கொலை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகளில், பாதாள உலக கும்பலின் அடையாளத்தை பதிப்பதற்கும் துப்பாக்கி தாரிகளை காரில் அழைத்து செய்வதற்கும் உதவி செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 8 ஆம் திகதி, கொழும்பு அத்துருகிரிய பிரதேசத்தில், பச்சை குத்தும் நிலையம் ஒன்றின் திறப்பு விழாவின் போது இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில், கிளப் வசந்த உட்பட இருவர் உயிரிழந்தனர். பிரபல பாடகி கே.சுஜீவா உட்பட 4 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தல் விதிமீறல்கள்; 4,411 முறைப்பாடுகள்

கொழும்பு, செப். 18

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து இதுவரை 4,411 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி தேசிய தேர்தல் முறைப்பாடு முகாமைத்துவ நிலையத்திற்கு 1,379 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாடு முகாமைத்துவ நிலையங்களுக்கு 3,032 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அத்துடன், மொத்தம் 4,411 புகார்களில் 3,828 இற்கு தீர்வு காணப்பட்டுள்ளன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# யுக்தியவில் 761 பேர் கைது

கொழும்பு, செப். 18

நாடளாவிய ரீதியில் நேற்றுகாலை வரையான 24 மணிநேரத்தில் போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 761 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 753 ஆண்களும் 8 பெண்களும் அடங்குவர் என்றும் பொலிஸார் கூறினர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 12 பேர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 2 பேரை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# தமிழர் உரிமையை அங்கீகரிக்க சங்குக்கு வாக்களிக்க வேண்டும்

## வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜெயசேகரன்

யாழ்ப்பாணம், செப். 18

"ஜனநாயக முறையில் கிடைத்த ஓர் அரிய சந்தர்ப்பத்தை ஒவ்வொரு தமிழனும் பயன்படுத்தி எமது உரிமையை அங்கீகரிக்க சங்கு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்"- இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இ. ஜெயசேகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு,

"கடந்த 75 வருடங்களாக தமிழர்கள் தங்கள் உரிமைக்காக பலவகையில் போராடிய போதும் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கான எந்தத் தீர்வையும் இதுவரை வழங்கவில்லை. பல ஒப்பந்தங்கள், பல வட்டமேசை மாநாடுகள், பல பேச்சுகள், பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டும் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற ஆகக்குறைந்த அதிகாரமான 13ஆவது அரசமைப்பு திருத்தத்தைக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தியதா?

தந்தை செல்வா தொடக்கம் சம்பந்தர் ஐயா வரை ஏமாற்றப்பட்டார்கள். ஆகவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை எமது தீர்வுக்கான புதிய அணுகுமுறையாக கருதி அனைத்து தமிழ் மக்களும் சங்குச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்.

நாம் இந்த நாட்டின் பூர்வீக குடிகள் - வடக்கு, கிழக்கு தமிழர்களுடைய தாயகம் - நாம் தனித்துவமானவர்கள் - எமக்கு சுயநிர்ணய உரிமையுண்டு - எமது நிலம், மொழி, கலை, கலாசாரம், பண்பாடு போன்றன பாதுகாக்கப்பட வேண்டும்.

அதற்கு பூரண சுயாட்சி அதிகாரம் எமது பகுதிக்குத் தேவை என்பதை முன்னிறுத்தி தமிழ் மக்கள் தங்கள் கோரிக்கைக்கான சர்வஜன வாக்கெடுப்பாக இந்தத் தேர்தலை கருதி ஒவ்வொரு தமிழனும் தவறாது சங்கு சின்னத்துக்கு வாக்களித்து எமது உரிமையை நிலைநாட்ட வேண்டும்.

எமது கோரிக்கையை வன்முறையற்ற ஜனநாயக வழியில் கிடைத்த அரிய சந்தர்ப்பமாக கருதி இந்தத் தேர்தலில் மக்கள் ஒவ்வொருவரும் வாக்களிக்க வேண்டும்.

இதன்மூலம் இலங்கை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் தமிழர்கள் தம் உரிமைக்கான கோரிக்கையில் உறுதியாக இருக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு தமிழ் மகனும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் இணைந்து சங்கு சின்னத்துக்கு வாக்களிப்பதன் மூலம் நாங்கள் ஒவ்வொருவரும் இந்த உரிமைக்கான அங்கீகாரத்துக்கு பங்களித்துள்ளோம் என்பதை உறுதிப்படுத்த வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் ஏனைய பகுதியில் வசிக்கும் எமது தாயகத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்ப் பொது வேட்பாளரான பா. அரியநேத்திரனை ஆதரித்து சங்கு சின்னத்துக்கு வாக்களித்து உங்கள் வரலாற்று கடமையை நிறைவேற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்"- என்றுள்ளது.




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org